விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 086 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 01 வியாழக்கிழமை (14.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### பூதாகரமாகும் வெடுக்குநாறி விடயம்
# சிறையில் உள்ளவர்கள் நீதி கோரி உணவு தவிர்ப்பு

(வவுனியா)

**வெடுக்குநாறிமலை ஆதிசிவன் விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தமக்கு நீதி கோரி வவுனியா சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.**

வவுனியா, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய விவகாரத்தில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகர் உள்ளிட்ட எட்டு பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் வவுனியா நீதவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தமக்கு நீதிகோரி உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

விளக்கமறியலில்

16

## கிளிநொச்சியில் விபத்து; ஒருவர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொன்னகர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று இரவு இடம்பெற்றுள்ளது. விபத்தில் பொன்னகர் பகுதியை சேர்ந்த சந்தானம் புஸ்பராசா என்ற 34

15

### இளம் குடும்பஸ்தர்
## அல்வாயில் சடலமாக மீட்பு

(கரணவாய்)

அல்வாய் வட மத்தியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த

15

## யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா இன்று

QRஐ ஸ்கான் செய்து நேரலையில் பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, இன்று14ஆம் திகதிமுதல்நாளை மறுதினம் 16ஆம் திகதி வரை மூன்று நாட்கள் பல்

15

### வெடுக்குநாறியில் நடைபெற்ற அநீதிகளுக்கு
## உரிய தீர்வு கிடைக்கும்வரை பாராளுமன்றை புறக்கணியுங்கள்

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தமிழ் எம்.பிக்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரச கட்டமைப்பின் அத்துமீறல்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும்வரை பாராளுமன்றை புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்து உதவுமாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு கோரியுள்ளது.

15



### அனைத்தையும் இலவசமாகக் கொடுப்பதே
## பொருளாதாரம் வீழ்ச்சியடைய மிக முக்கியமான காரணம் - ரணில்

(கொழும்பு)

அனைத்தையும் இலவசமாகக் கொடுப்பதுதான் பொருளாதாரம் வீழ்ச்சியடைய மிக முக்கிய காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யுனைடட் யூத் இளைஞர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த "இளைஞர் எமது எதிர்காலம்" என்ற சிநேகபூர்வ சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

15

### தலைமன்னார் கடலில்
## மீன்பிடிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(மன்னார்)

தலைமன்னாரில் கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

56 வயதான மீனவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படகில்பயணித்துக்கொண்டிருந்தபோதே, உடல்நலக் குறைவால் குறித்த மீனவர் கடலில் வீழ்ந்

15

## 1000 தேசிய பாடசாலைகள் திட்டம் இரத்தாகியது

1000 தேசிய பாடசாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட பாடசாலைகள்தேசிய பாடசாலை என்ற பெயரை கடிதத் தலைப்பிலும், உத்தியோக பதவி முத்திரைகளிலும், பாடசாலை பெயர் பலகைகளிலும் பயன்படுத்த உடனடியாக தடை விதித்து கல்வி அமைச்சு சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அப்பாடசாலைகள்தொடர்ந்தும் மாகாண பாடசாலைகளாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## பண்ணை கடலில் பாய்ந்த பொலிஸாரின் ஆட்டோ



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸாரின் முச்சக்கர

15

### வெடுக்குநாறி சம்பவம்
## நீதி கோரி பாரிய எதிர்ப்பு போராட்டத்துக்கு அழைப்பு

(வவுனியா)

வெடுக்குநாறிமலை தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் நீதிகோரியும் பாரிய எதிர்ப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

நெடுங்கேணிச் சந்தியில் நாளை குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்துக்கு
விற்பனையாளர் தேவை.
ஆண் / பெண் நேரில் வரவும்
மதிய உணவுடன் கூடிய சம்பளம்

சென்னை பெசன்
இல. 63, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.

(0074)

## நீதி கோரி...

ரால் குறித்த போராட்டத்திற்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில் 08.03.2024 அன்று எமது ஆலய வளாகத்தில், சிவ ராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த எமது ஆலயத்தின் பரிபாலன சபையின் நிர்வாகிகள் மீதும், சிவ பக்தர்கள் மீதும் பொலிஸார் நடத்திய வன்முறைகளை எதிர்த்தும், கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ள சிவபக்தர்களை விடுவிக்கக் கோரியும் பாரியளவிலான வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம். நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நெடுங்கேணி சந்தியில் ஆரம்பிக்கும் இந்தப் போராட்டமானது, வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வரைக்கும் பேரணியாகச் சென்று, இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி மற்றும், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கான மகஜர்கையளிக்கப்படும்.

அரச அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்களையும், சமயம்சார்ந்த அமைப்புக்களையும், தமிழ் அரசியல்வாதிகளையும், தமிழ் உணர்வாளர்களையும், சிவில் சமூகத்தினரையும், பல்கலைக்கழக மாணவர்களையும், ஊடகங்களையும், கலந்துகொள்ளுமாறு தயவுடன்கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

லண்டன் - 990/=
பிரான்ஸ் - 1890/=
ஜேர்மனி - 1790/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2090/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(0075)


இந்தியாவில் இருந்து இலங்கைக்கு
ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக
நேரடியாக இறக்குமதி செய்யப்படும்
விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும்
பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக
பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் நடன பாட ஆசிரியை
திருமதி **கரோலின் யுவிற்றன்** அவர்களின்
பாசமிகு தந்தை

## அருளப்பு அழகரட்ணம்

அவர்களின் திடீர் மறைவு குறித்து
ஆழ்ந்த துயரம் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் : 26.03.1949
மறைவு : 12.03.2024

பிரிவுத் துயரில்...
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

(0073)

## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
மானிப்பாய்

### கதிரியக்க அலகு

முதற்தர X-ray பிரதிகள்






20%
விலைக்கழிவுடன்

முன் பதிவுகளுக்கு
0212255157
0743455158

Best Quality Digital X-Ray

(C-8526)

# மரண அறிவித்தல்



தோற்றம்
02 - 01 - 1957

மறைவு
13 - 03 - 2024

## நாகலிங்கம் லிங்கேஸ்வரன்

உடுவில் கற்பக்குணையை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மத்தியை வசிப்பிமாகவும் கொண்ட நாகலிங்கம் லிங்கேஸ்வரன் அவர்கள் நேற்று (13.03.2024) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் நாகலிங்கம் - பராசக்தி தம்பதியரின் ஏக புதல்வனும் இராசையா - லக்சுமி தம்பதியரின் அன்பு மருகமனும் தவமணியின் அன்புக் கணவரும் வேணுகானன், மயூரி, பிரணவகானன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தபித்தாளின் அன்பு மாமனாரும் லேயா, லியாம் ஆகியோரின் அன்புப் பேரனும் யோகலிங்கம், சண்முகலிங்கம் (நோர்வே), சத்தியலிங்கம், தவராணி, காலஞ்சென்றவர்களான குமாரலிங்கம், லிங்கராணி, யோகராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தா, ரஜனி (நோர்வே), கௌசலா, பிரபாகரன், வனிதா, நாகராசா, ஆனந்தராஜன் (ஜேர்மனி), சிவநேசன், லலிதா, யோகநாதன், லோகநாதன் (பிரான்ஸ்), புஸ்பராணி, கலாநிதி, தயாநிதி, இராஜகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இரகுநாதன், பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.03.2024) வெள்ளிக் கிழமை காலை 10.00 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(0072)

# மரண அறிவித்தல்



## சரவணை தில்லைநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்)

ஏழாலை மத்தி ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணை தில்லைநாதன் அவர்கள் நேற்று (13.03.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணை-சின்னாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நவரத்தினமணி அவர்களின் அன்புக் கணவரும் தர்ஜினி (ஆசிரியை- யா/ ஏழாலை தெற்கு அமெரிக்கமிஷன் த.க.பாடசாலை), தாரணி (சமுர்த்தி உத்தியோகத்தர் உடுவில் பிரதேச செயலகம்), மயூரன் (மின்சாரசபை உத்தியோகத்தர் - சுன்னாகம்), காலஞ்சென்றவர்களான யசோதரன், மைதிலி, மாதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமாரசாமி (ஓய்வுபெற்ற முகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ சங்கம்), காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மார்க்கண்டு, புஸ்பராணி, புவனேஸ்வரி, தங்கரத்தினம் காலஞ்சென்வர்களான கனகம்மா, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் விக்னேஸ்வரி, கணேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் சிவகாந்தன் (தபாலக உத்தியோகத்தர்), ஜெயகாந்தன் (பாடசாலை உத்தியோகத்தர் யா/ ஏழாலை மகா வித்தியாலயம்), சசிகாந்தன் (பாடசாலை உத்தியோகத்தர் யா/ மயிலணி மகா வித்தியாலயம்), லீனதயாளன் (கிராம சேவையாளர்), தமிழினி (மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானி - களுபோவில வித்தியாசாலை), தயாளினி (பல்கலைக்கழக விரிவுரையாளர் - கொழும்பு), தயாளரூபினி, தயாளந்தினி, சுகுனதாஸ் ஆகியோரின் பெரிய தந்தையும் நவநீதராஜா (ஜெயா), சுபாஜினி (ரூபி) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் யோகேஸ்வரி (அலுவலக உத்தியோகத்தர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்), ஜெயசந்திரன் (அவுஸ்திரேலியா), விமல்ராஜ், கஜன், கஜனி, சுமன், மதன், குயினா, யசோதரன், மணிவண்ணன், பகீரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கிளிநொச்சி கல்வி வலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கரிஷ், திஷாரா, தனுஸ்ரீ, தூபிகா, ஜன்சிகா, கார்த்திக், சோனியா, திவ்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 102 4342

தகவல்:
குடும்பத்தினர்

(C-8529)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டமளிப்பை முன்னிட்டு ஒருவழிப் போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு இராமநாதன் வீதியானது கலட்டிச் சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்தி நோக்கியதான ஒருவழிப் போக்குவரத்திற்காக வியாழக்கிழமை முதல் நாளை மற்றும் நாளை மறுதினம் காலை 8 மணிமுதல் பிற்பகல் 6 மணிவரை அனுமதிக்கப்படும். இக் காலத்தில் இவ்வீதியினைப் பயன்படுத்துவோர் மாற்று ஒழுங்கினைக் கைக்கொள்ளுமாறு யாழ்.மாநகர ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# இலங்கையில் அதிகரிக்கும் இணைய மோசடிகள்

(கொழும்பு)

இலங்கையில் இணைய மோசடிச் சம்பவங்களில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக இலங்கை கணனி அவசர பதிலளிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இணைய வழியில் தொழில் வாய்ப்பு வழங்குதல், கிறிப்டொ கரன்ஸி, பிரமிட் போன்ற மோசடிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அந்த அமைப்பின் சிரேஷ்ட தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுகொல தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் 1609 மோசடி சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், இந்த ஆண்டில் ஜனவரி மாதம் 110 சம்பவங்களும், பெப்ரவரி மாதம் 213 சம்பவங்களும், மார்ச் மாதம் இதுவரையில் 100 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

நிர்வாண புகைப்படங்களை வெளியிடுவதாக மிரட்டுதல், நிதி மோசடி, சமூக ஊடகங்களின் ஊடான மோசடிகள், போலிக் கணக்குகளை உருவாக்குதல், அனுமதியின்றி கணக்குகளுக்குள் பிரவேசித்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் பதிவாகி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

# உத்தேச சட்டமூலம் தொடர்பில்
# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு
# அழுத்தம் கொடுக்க வேண்டும்
## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

**உத்தேச அரசசார்பற்ற அமைப்பு சட்டத்தை கைவிடுவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்த வேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.**

மேலும், மனித உரிமை தராதரங்களை மதிக்கும் விதத்தில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில்மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும் எனவும் குறித்த கோரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச நாணயநிதியத்திற்கு வழங்கப்பட்ட கடிதம் ஒன்றில் மனித உரிமை கண்காணிப்பகம் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளது.

இதன்படி குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சிவில் சமூகத்தின் நடவடிக்கைகளை பெருமளவிற்கு கட்டுப்படுத்தும் நாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் நகல் சட்ட மூலத்தை இலங்கை அரசாங்கம் கைவிடவேண்டும் என சர்வதேச நாணயநிதியம் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக் கொள்ள வேண்டும்.



அத்தோடு, நல்லாட்சி மற்றும் ஊழலிற்கு எதிரான போராட்டத்திற்கு பொதுமக்கள் கண்காணிப்பு என்பது மிகவும் முக்கியமானதாக காணப்படுகின்ற போதிலும் அடிப்படை சுதந்திரங்களை கட்டுப்படுத்தும் பல சமீபத்தைய நடவடிக்கைகள் சட்டங்களில் உத்தேச அரசசார்பற்ற அமைப்புகள் சட்டமும் உள்ளது." எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

யா/பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்
நூற்றாண்டு விழா
1924-2024
முதலாம் நாள் நிகழ்வுகள்(15.03.2024)
நேரம்-மு.ப 08.00 மணி
இடம்-பாடசாலை திறந்தவெளி அரங்கு
நடைபவனி மற்றும் மரநடுகை
தலைவர்-திரு.பரமலிங்கம் சந்திரபாகு(அதிபர்)
பிரதம விருந்தினர்-திரு.கந்தசாமி கண்ணன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறைக் கோட்டம்)
சிறப்பு விருந்தினர்கள்-திரு.மார்க்கண்டன் நீலகண்டன் (பொது முகாமையாளர், Asia Aset Finance(PLC), திரு.சிறீஸ்கந்தராசா ரகுபரன் (A.D.O கமநல அபிவிருத்தித்திணைக்களம், யாழ்ப்பாணம்)
இரண்டாம் நாள் நிகழ்வுகள்(16.03.2024)
நேரம்-மு.ப 09.00 மணி
இடம்-பாடசாலை திறந்தவெளி அரங்கு
மாணவர் பரிசளிப்பு, முத்திரை வெளியீடு மற்றும் மாணவர் கலைநிகழ்வுகள்
தலைவர்-திரு.பரமலிங்கம் சந்திரபாகு(அதிபர்)
பிரதம விருந்தினர்-திரு.சிவபாதசுந்தரம் சத்தியசீலன் (பிரதேச செயலர், பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு)
சிறப்பு விருந்தினர்கள்-திரு.முருகுப்பிள்ளை சிறீபதி (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்/ வடமராட்சி வலயம்) திரு.யோகேந்திரன் குகதாஸ் (Attorney-at- law,Nortary Public Commissioner for Oaths &Regd.Company Secretary)
மூன்றாம் நாள் நிகழ்வுகள்(17.03.2024)
நேரம்-மு.ப 09.00 மணி
இடம்-பாடசாலை திறந்தவெளி அரங்கு
முன்னாள் அதிபர்கள் கௌரவிப்பு,காலஞ்சென்ற அதிபர்களின் உருவப்பட திரைநீக்கம்,நூற்றாண்டு மலர் வெளியீடு,பழைய மாணவர்கள் கலைநிகழ்வு மற்றும் சரஸ்வதி சிலை திறப்பு விழா
தலைவர்-திரு.பரமலிங்கம் சந்திரபாகு(அதிபர்),
திரு.நித்தியானந்தன் நிரஞ்சித்குமார் (Attorney-at- law,Nortary Public Commissioner for Oaths &Regd.Company Secretary)
பிரதம விருந்தினர்-திரு.கனகசபை சத்தியபாலன் (வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம்,வடமராட்சி)
சிறப்பு விருந்தினர்கள்-திருலோகநாதன் விஸ்வநாதன் (நிர்வாக உத்தியோகத்தர், பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம்)
செல்வி.செபஸ்தியாம்பிள்ளை றெஜினா (முன்னாள் ஆசிரியை)
[062]
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம், பாடசாலைச் சமூகம்.

# 'பரேட்' சட்ட விவகாரம் ஒருதலைப் பட்சமானது
## இலங்கை வங்கிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பரேட் சட்டத்தின் ஊடாக கடனை வசூலிப்பதை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக எடுத்துள்ள தீர்மானம் வங்கித் துறையில் பெரும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என இலங்கை வங்கிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை வங்கிகள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

முழு வர்த்தக சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தாத ஒரு சில கடனை செலுத்தாதவர்களின் அழுத்தங்களுக்கு அமைய இந்த முடிவை அரசாங்கம் எடுத்துள்ளதாக இலங்கை வங்கிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை கடன் வசூல் சட்டங்களை. நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்தின் தலையீடு ஒரு எச்சரிக்கையாகும் என்றும் இலங்கை மத்திய வங்கியும் குறிப்பிட்டுள்ளது.

உரிமம் பெற்ற அரச வங்கிகள், பட்டியலிடப்பட்ட தனியார் வங்கிகள் மற்றும் சர்வதேச வங்கிகளின் கிளை அலுவலகங்கள் ஆகியவற்றால் அனைத்து வங்கிகளையும் இலங்கை வங்கிகள் சங்கம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

எனவே அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக பரேட் சட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாகவும் இது தொடர்பாக வங்கிகளுடன் எவ்வித கலந்துரையாடலும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இலங்கை வங்கிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தினால் அனைத்து வர்த்தகர்களுக்கும் கடன் பெறுவதற்கான செலவு அதிகரிக்கும் என இலங்கை வங்கிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (நி-5-6)


பெயர் மாற்ற அறிவித்தல்
சுழிபுரம் மத்தி சுழிபுரத்தைச் சேர்ந்த மாதவர் வடிவேல் ஆகிய நான் இன்றுமுதல் எமது பெயரினை மாதவர் ஆனந்தவடிவேல் எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். எனவே இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என்பதனை இலங்கை செனநாயகக் குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
(067)
உண்மையுள்ள
மாதவர் ஆனந்தவடிவேல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# இந்துக்களின் போர் நாளை ஆரம்பம்






"வடக்கிற்கும் தெற்கிற்குமான இந்துக்களின் போர்" என வர்ணிக்கப்படும் 13 ஆவது மாபெரும் துடுப்பாட்டப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையே நாளை வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த போட்டி நாளை மறுதினம் வரை இடம்பெறவுள்ளது.

மிகுந்த எதிர்பார்ப்புடன் இந்துக்களின் போர் விறுவிறுப்பாக அமையும் என கல்லூரி ரசிகர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



சமூக சேவைகள் திணைக்களமும் முல்லைத்தீவு மாவட்ட செயலகமும் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கான உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டி நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேசசபை மைதானத்தில் நடைபெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3063

நர்மதா




கவினியா





நிதுஷா




தாருசன்




மதுரன்




தனேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நாடு திரும்பும் வைத்தியர்கள் பற்றாக்குறை எதிர்காலத்தில் தீர்க்கப்படும்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டை விட்டு வெளியேறிய பல வைத்தியர்கள் தற்போது மீண்டும் நாடு திரும்புவதால் இலங்கையின் சுகாதாரத் துறையில் உள்ள மருத்துவர்களின் பற்றாக்குறை எதிர்காலத்தில் தீர்க்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருத்துவ சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி. விஜேசூரிய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசேட வைத்தியர்கள் மற்றும் தாதிகள் உட்பட பல வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியதையடுத்து அண்மையில் நாட்டில் வைத்தியர் பற்றாக்குறை ஏற்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக சுகாதாரப் பணியாளர்கள் நாட்டை விட்டு அதிகளவில் வெளியேறினர்.

இந்நிலையில் நாட்டை விட்டு சென்ற விசேட வைத்தியர்கள் உட்பட பல வைத்தியர்கள் தற்போது இலங்கைக்கு திரும்பி வருவது அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்குத் திரும்பும் வைத்தியர்கள் மூலம் தேவையான வைத்தியசாலைகளுக்கு விசேட வைத்தியர்களை நியமிக்க சுகாதார அமைச்சினால் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது அவர் தெரிவித்தார். (நி-5-6)




# இராசிபலன்

14.03.2024
பங்குனி 01, வியாழக்கிழமை
சதுர்த்தி காலை 7.05 மணிவரை

பஞ்சமி பின்னிரவு 5.28 மணிவரை
பரணி முன்னிரவு 10.27 மணிவரை
சுபநேரம் 7.51-9.21 மணிவரை
இராகுகாலம் 1.51-3.21 மணிவரை

சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்**: குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள்.

**ரிஷபம்**: சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், எதிலும் வேகத்தைக் குறைத்து பொறுமையாகச் செயற்படுவது நல்லது.

**மிதுனம்**: பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்**: கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், ஒளிமயமான வாழ்வுக்கு உறுதுணை புரியும் நாள், தலைமைப் பொறுப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**: மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படும், விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் கைகூடும்.

**கன்னி**: ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், நீங்கள் பெரிதாக மதித்த ஒருவர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்**: பொது நலனில் அதிக அக்கறை கட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களும், நண்பர்களும் ஒத்துழைப்பு வழங்குவர், போசன சுகமுண்டு.

**தனுசு**: மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்களள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்**: வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்**: தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள், எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்**: வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், கடமையில் கண்ணும் கருத்தமாக செயற்படுவீர்கள்.

எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை, யா/மகாஜனக் கல்லூரியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ம.மணிசேகரத்தின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி, வைத்திய கலாநிதி.பரா.நந்தகுமார் சிறப்பு விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் அம்பிக்குமார், கௌரவ விருந்தினராக யா/மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலய அதிபர் சி.சிவறதீஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-5-6)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

அரியாலையை பிறப்பிடமாக கொண்ட நல்லையா சுதேஸ்குமார் கடந்த மாதம் 26 ஆம் திகதி மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாஸ் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அலுவலகத்தில் நிதி உதவியாளராகவும், சர்வதேச கரப்பந்தாட்ட மத்தியஸ்தராகவும், இலங்கை கிரிக்கெட் panel 4 நடுவராக மற்றும் உலக மெய்வல்லுனர் தரம் 1 தொழில் நுட்ப அலுவலராகவும் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# லிங்கத்தை சுற்றியிருந்த வெள்ளை நாகம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு காங்கேசன் துறை பகுதியில் உள்ள சிறு கோவிலில் லிங்கத்தை வெள்ளை நாகம் சுற்றியிருக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காங்கேசன் துறை தெற்கு பகுதியில் உள்ள தகரங்களால் வேயப்பட்ட சிறு அம்மன் கோவிலில் பிள்ளையார் சிவலிங்க உருவச் சிலைகளும் இலட்சுமியின் உருவப்படமும் வைத்து காணப்படுகிறது. பௌர்ணமி தினங்களில் பாம்புகள் அடிக்கடி குறித்த ஆலயத்திற்கு வருவதாகவும் அவ்வாறு ஒரு முறை வந்தபோதே குறித்த காணொளியை இராணுவத்தினரால் எடுக்கப்பட்டு இருந்தது. (நி-5-6-33)



# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை-சங்கரத்தை வீரபத்திர சுவாமி சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடர் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்ற நிலையில் இன்று வியாழக்கிழமை அரையிறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது.

40 வயதிற்கு மேற்பட்டோருக்கான காட்சி போட்டி 3.45 மணிக்கு நாமகள் விளையாட்டு கழகத்தை எதிர்த்து சிவானந்தா அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்நீக்கிலஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணியும் மோதவுள்ளன. (நி-5-6-90)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி


(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியால இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியானது இன்று வியாழக்கிழமை பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியால அதிபர் கனகராசா சிவதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர் ராஜகோபால் ராஜசீலன், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி பணிப்பாளர் கந்தசாமி கண்ணன் மற்றும் விசேட விருந்தினரா ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி சாதனைப் பெண்மணி சர்வதேச ஓட்டப்பந்தய பதக்க வீராங்கனையுமான கலாநிதி அகிலத்திருநாயகி சிறிசெயானந்தபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து சாதனைப்பெண்மணி கலாநிதி அகிலத்திருநாயகி சிறிசெயானந்தபவனின் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# 'வேள்வித் திருமகன்' திருப்பாடுகளின் காட்சி




(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு "வேள்வித் திருமகன்" என்னும் பெயரில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது

இம்முறை மேடையேற்றப்படும் "வேள்வித் திருமகன்" திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது. இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்ற அரங்கக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார்.

திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரியசேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே "வேள்வித் திருமகன்". மரிய சேவியர் அடிகளால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழிநடையிலும், பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது.

வழமை போலவே பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களின் பங்கேற்புடன் "வேள்வித் திருமகன்," அரங் கேறத் தயாராகின்றது." (நி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 200 | 250 | 230 |
| உருளைக்கிழங்கு | 150 | 240 | 200 | 250 | 195 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 | 400 | 315 |
| தக்காளி | 300 | 250 | 300 | 400 | 230 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 140 | 200 | 120 |
| கோவா | 300 | 300 | 380 | 400 | -- |
| கரட் | 350 | 520 | 480 | 600 | 400 |
| பூசணி | 220 | 220 | 200 | 300 | 170 |
| புடோல் | 180 | 180 | 180 | 150 | 130 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 200 | 125 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 300 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 600 | 600 | 600 | 700 | 480 |
| பாகற்காய் | 450 | 350 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 400 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 200 | -- |
| பயற்றங்காய் | 300 | 250 | 200 | 400 | 220 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 400 | 250 |
| பீற்றூட் | 300 | 250 | 300 | 300 | 250 |
| கறிமிளகாய் | 400 | 600 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 1000 | 1000 | 1200 | 1100 |
| போஞ்சி | 400 | 250 | 450 | 500 | 300 |
| கத்தரிதம்புள்ள | 130 | 120 | 200 | 200 | - |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 70 | 100 | 50-60 |
| தேசிக்காய் | 150 | 250 | 150 | 250 | 125 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 80-120 | 50-100 |
| இராசவள்ளி | 350 | 400 | 500 | 400 | -- |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 300 | 50 |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 110 |
| ஈரப்பலா | 100 | | 80 | 200 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு/உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர்

# உயர்திரு.வி.ஸ்ரீகரன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்

## நல்லை ஆதீனத்தின் ஆசிச்செய்தி



மு/உடையார்கட்டு மகா வித்தியாலய அதிபராக கடமையாற்றி ஓய்வுநிலை அடைவதை மணிவிழா எடுத்து சிறப்பு செய்ய இருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தருகிறது.

பல பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக இருந்து கல்விப் பணியாற்றி அனைத்து மாணவ, மாணவிகளையும் கல்வியில் சிறந்த பேறுபேறுகளை பெறக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தி கல்விக்கண்ணை திறந்து வைத்த அனைவருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்தவர் அதிபர் ஸ்ரீகரன். இவருடைய சேவையை எடுத்தியம்பும் வகையில் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மணிவிழா எடுத்து சிறப்பிப்பது கல்வி சமூகத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இவருடைய வழிகாட்டல் ஏனைய அதிபர், ஆசிரியர்களுக்கும் உரித்தாகுக.

ஓய்வு பெற்றாலும் கல்விப் பணியில் தொடர்ந்து பணியாற்ற ஸ்ரீகரன் தம்பதிகளை வாழ்த்துகின்றோம். பாடசாலை வளர்ச்சியடையவும் சிறப் புக்களைப் பெறவும் இறையருளை சிந்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்,**
**நல்லை ஆதீனம்.**

## முதல்வருக்கு வாழ்த்துச்செய்தி



பணி நிறைவு கண்டு சிறந்து நிற்கும் முதல்வர் திருவாளர் வினாசித்தம்பி ஸ்ரீகரன் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்வுறுகின்றேன்.

சக மாணவனாக, ஆசிரியனாக, முதல்வர் குழா மின் நண்பனாக மிக நீண்டகால உறவுநிலை எனக்கும் திருவாளர் வி.ஸ்ரீகரன் அவர்களுக்கு மிடையே உண்டு. யாழ்.பல்கலைக்கழகத்தின் 1986/87 கல்வியாண்டுத் தொகுதிமாணவர்களாக எம்தொடர்பு ஆரம்பமானது. ஆசிரிய சேவையையும் பல்கலைக்கழக உள்வாரிப்பட்டக் கல்வியையும் சமகாலத்தில் தொடரக் கூடிய வாய்ப்புக்கள் அக்காலத்தில் காணப்பட்டிருந்ததால் அவர் அதனைப் பயன்படுத்தியிருந்தார்.

உண்மை அன்புறவுடன் பழகும் தன்மை, சூழ் நிலை புரிந்து செயலாற்றும் பண்பு, எடுத்த காரியத்தை மிகச் சிரத்தையுடன் நிறைவேற்றத் துடிக்கும் ஆளுமை மனங்கொண்ட இறை சிந்தனை என்ப வற்றை அவரிடத்தில் நான் கண்டு கொண்டேன். இவையே சமூகமயப்பட்ட ஒரு முதல்வராக அவரை அடையாளப்படுத்தியுள்ளதெனலாம்.

மு/உடையார்கட்டு மகா வித்தியாலயத்தினுடைய வரலாற்றில் முக்கியமானதொரு பதிவு முதல்வர் திருவாளர் வி.ஸ்ரீகரன் அவர்களுக்குண்டு, மீள் குடியேற்றத்தின் பின்னரான இப் பள்ளியின் விரைவான வளர்ச்சியின் உச்சமாக இன்று ஒரு தேசிய பாட சாலைத் தெரிவு நிலைக்குள் அங்கீகரிக்கப்பட்டுள்ள மையைச் சுட்டிக் காட்டலாம்.

இன்றைய காலப் பொழுதுகளின் பல்நிலைப்பட்ட சவால்களையும் நேர் கொண்டு, கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் கணிசமான பதிவுகளையும் சிறப்புகளையும் சுமந்து இப்பள்ளி நிமிர்ந்து நிற்கிறது.


இந் நிலைக்கு உகந்த வகையில் ஆசிரிய செயலணியினரையும் மாணவர்களையும் வழிப்படுத்திய வகையில் முதல்வர் அவர்களின் பணி மகத்தானது. செவ்வனே தன்பணியாற்றி மனநிறைவோடு பணி நிறைவு காணும் முதவர் திருவாளர் வி.ஸ்ரீகரன் அவர்கள் எமது கோட்ட கல்விசார் அணியினருடன் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி கூறுவதோடு, ஓய்வுக் காலத்தில் மிகுந்த மன மகிழ்வு கொண்டு குடும்பத்தவரோடு நீண்ட கால ஆரோக்கிய வாழ்வு பெற இறையாற்றலை வேண்டி என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்வ வளமுடன்

**சின்னையா பாஸ்கரன்**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**புதுக்குடியிருப்பு.**

**பாராட்டி வாழ்த்துவோர்:**
**பாடசாலைச் சமூகம்,**
**மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்.**

(059)



**உயர்திரு.**

## வினாசித்தம்பி ஸ்ரீகரன்


**முதல் நியமனம் 06.08.1988**

- **வ/நொச்சிக்குளம் அ.த.க பாடசாலை**
  **06.08.1988-31.12.1992 (கடமை நிறைவேற்று அதிபர்)**
- **வ/நெடுங்கேணி ம.வி**
  **1993-1997 (ஆசிரியர்)**
- **வ/குளவிசுட்டான் அ.த.க பாடசாலை**
  **1998-2003 (அதிபர்)**
- **மு/தேவிபுரம் அ.த.க பாடசாலை**
  **2004-2010 (அதிபர்)**
- **மு/விசுவமடு ம.வி**
  **2011-2022. (அதிபர்)**
- **மு/உடையார்கட்டு ம.வி**
  **2012-2024.03.14 (அதிபர்)**

❖ **நிரந்தர அதிபர் நியமனம்**
**2000-2007 வரை (அதிபர் தரம் -2)**

❖ **2008 முதல் தரம் 01**
**நிரந்தர அதிபர் சேவை 25 வருடங்கள்**

## மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துச்செய்தி



இயற்கை அழகால் இணைத்துச் செய்யப்பட்ட முல்லைத்தீவு மண்ணின் கண் கல்வியூற்றாய் விளங்கும் மு/உடையார் கட்டு ம.வியின் அதிபராக நீண்டகாலம் சேவையாற்றி ஓய்வினைப் பெறவுள்ள அதிபர் திரு.வி.ஸ்ரீகரன் அவர்களின் மணிவிழாவிற்கான ஆசிச் செய்தியினை வழங்குவதனை முன்னிட்டு பேருவகையடைகிறேன்.

நான் உடையார்கட்டுடன் நீண்டகாலத் தொடர்பினை கொண்டவன் என்ற அடிப்படையிலும் இவ் உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் என் ஆரம்பகால ஆசிரியர் நியமனத்தைப் பெற்று கடமையாற்றினேன் என்பதனாலும் அச் சமூகத்தின்பால் அதிகபிணைப்பினை உடைய வனானேன். அதிபர் திரு.ஸ்ரீகரன் 2012 ஆம் ஆண்டு இப் பாடசாலையை பொறுப்பேற்று அதிபராக சேவைக்கு வந்ததன் பின்னரே கணித, விஞ்ஞானப் பிரிவுகளை உயர் தரத்திற்கு கொண்டு வந்தவர். அன்றுமுதல் இப்பாடசாலையில் விஞ்ஞானம் உள்ளடங்கலாக அனைத்துத் துறைகளிலும் பாரிய தொகையில் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வைப்பதை உறுதிப்படுத்தினார். மாணவர்கள் கல்வி, இணைபாடவிதான செயற்பாடு களில் அதிக பங்குபற்றலை இடம்பெறச்செய்து வெற்றிகண்டார்.

மேலும் விளையாட்டுத்துறையை பொறுத்தவரை தேசிய ரீதியிலும் மாணவர்கள் சாதனை படைப்பதை இன்றும் காண முடிகிறது. மாணவர்களின் ஒழுக்கம் போன்ற துறைகளிலும் தனித்து அக்கறை காட்டும் இவ் அதிபர் காலத்தில் பொறியியல், வைத்திய, வர்த்தக, கலைத்துறையில் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் அனுப்பப்பட்டு ஒழுக்கமான மாணவர் குழாமொன்றை உருவாக்கினார். இத்தகைய பண்புசார் மனிதரான அதிபர் வி.ஸ்ரீகரன் அவர்களின் நிர்வாகத்தினால் கவரப்பட்டு பெற்றோரினாலும் மாணவர்கள் தாமாகவும் விரும்பி வந்து சேரும் ஓர் பாடசாலையாக இதனை தன் பன்னிர ண்டு வருட நிர்வாகத்திறனால் உருவாக்கினார் என்று கூறுவது மிகையாகாது. இத்தகைய பண்பாளனான அதிபர் அவர்களை இம் மணிவிழா நாளில் வாழ்த்தி தன் ஓய்வுக் காலத்தினை மகிழ்வுடன் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.சிவராஜசிங்கம் ஜெயகாந்தன்,**
**மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர்,**
**மாவட்டச்செயலகம் முல்லைத்தீவு.**

## பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி

வீரமும் நல் விழுமியங்களும் நிறைந்த வன்னி மண்ணில் பல தசாப்தங்களாக ஆக தலைமுறைகள் பலவற்றிற்கு அறிவூட்டி கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய அதிபர் திருவாளர் வினாசித்தம்பி ஸ்ரீகரன் அவர்களை இத்தருணத்தில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பல ஆண்டுகளாக, குறிப்பாக இன அழிப்பு போர், அதன் பிரதிபலிப்புக்கள், பெருந்தொற்று, பொருளாதார சீரழிவு, இளைய சமூகத்தையும் குறிப்பாக பாடசாலை பிள்ளைகளையும் குறிவைத்து கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போதைவஸ்து மற்றும் சமூக சீர்கேடுகள் மத்தியில் ஒரு தனித்துவமான தலைமை ஆசானாக பாடசாலைகள் பலவற்றை வழிநடத்துவது எளிதான விடயமல்ல. குறிப்பாக கடந்த 12 வருடங்களாக உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபராக ஆற்றிய பணிகளை வியந்து பாராட்டுகின்றேன்.

தொடர்ந்தும் அதிபர் அவர்களின் பணியும் உடல் உள ஆரோக்கியமும் சிறப்புற இறைவனை பிராத்திக்கின்றேன்.

**அருட்பணி அ.அல்வின் கிருபாகரன்**
**பங்குத்தந்தை,**
**புனித யூதா ததேயு ஆலயம், உடையார்கட்டு.**

## மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



மு/உடையார்கட்டு மகா வித்தியாலய அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மணிவிழா நாயகன் திரு.வினாசித்தம்பி ஸ்ரீகரன் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வவுனியா மாவட்டத்தில் 15 வருடங்கள் ஆசிரியராகவும் கடமை நிறைவேற்று அதிபராகவும் மற்றும் அதிபராகவும் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிபராக 25 வருடங்களுமாக தனது வாழ்வின் 35 வருடங்கள் கல்விப் பணியாற்றியவராவார். கல்விப்பணிக்குத் தம்மை, அர்ப்பணித்து சேவை செய்வோரின் பணிகள் சிறப்பாக நினைவுபடுத்தப்பட வேண்டியவையாகும். அரச சேவையில் உள்ளவர்கள் ஓய்வு பெறுவதென்பது காலத்தின் கட்டளை. ஆனால் அவர்கள் தம் சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகள் காலம் காலமாக அவர் பெயரை நினைவு படுத்திக் கொண்டிருக்கும்.

அர்ப்பணிப்புடன் செயலாற்றி வினைத்திறன் மிக்க வெற்றியாளர்களை உருவாக்குவோம் என்ற தூர நோக்கோடு செயற்பட்டு செயலாற்றியவராவார். அதற்கமைய இவரது காலத்தில் கணித, விஞ்ஞானப்பிரிவு உருவாக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும். அத்தோடு மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தி சாதனைகளையும் நிலை நாட்டினார். அவர் ஆற்றிய கல்விப் பணிக்கு நன்றி கூறுவதுடன் அவரது இளைபாற்றுமைக்காலம் சிறப்பாக அமைந்து மென்மேலும் கல்விச் சமூகத்திற்கு பயன்தர வேண்டும் என்றும் சீரோடும் சிறப்போடும் நீண்ட காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த் துகின்றேன்.

**தி.ஜோண் குயின்ரஸ்,**
**வடக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரேசிலில் தீவிரமடையும் டெங்கு காய்ச்சல்

இவ் ஆண்டு 391 பேர் உயிரிழப்பு



(பிரேசிலியா)
பிரேசில் நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவல் தீவிரமாக அதிகரித்து வரும் நிலையில் டெங்கு காய்ச்சலுக்கான பரி சோதனைகளை பொதுமக் கள் அதிக அளவில் மேற் கொள்ள அந்நாட்டு அரசாங் கம் வலியுறுத்தி வருகிறது.

இதன்படி இந்த ஆண்டில் இதுவரை 15 லட்சத்து 83 ஆயிரம் பேர் டெங்கு காய்ச் சலால் பாதிப்பு அடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் 12 ஆயிரத்து 652 பேர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தனர் எனவும் அந்த நாட்டின் சுகாதாரத்துறை சார் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டெங்கு காய்ச்சல் பாதிப்புக்குள்ளாகி இந்த ஆண்டு இதுவரை 391 பேர் உயிரிழந்துள்ளதாகவும் மேலும் 854 இறப்புகள் விசாரணையில் உள்ளதாக வும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# அணு ஆயுதத்தை பயன்
# ச்சுறுத்தும் ரஷ்ய



(மொஸ்கோ)


ரஷ்யாவின் இ
சுதந்திரத்துக்கு அச்ச
ஆயுதங்களைப் ப
தயாராக இருப்பத
விளாடிமிர் புடின் தெ

ரஷ்ய அரசு தொலைக் காட்சிக்கு அளித்த பேட் டியிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

அணு ஆயுதப்போரைத் தூண்டக்கூடிய எந்த வொரு செயற்பாட்டையும் அமெரிக்கா தவிர்க்கும் என்று நம்புவதாக இதன் போது புடின் தெரிவித்தார்.

எனினும் ரஷ்யாவின் அணு சக்தி படைகள் அதற்குத் தயாராக உள்ளன
வித்தார்.
த்தில் அ
படுத்துவ

## உக்ரைன் தாக்குதலில் பற்றி எரிந்த ரஷ்யா எண்ணெய்க் களஞ்சியங்கள்



(மொஸ்கோ)
உக்ரைனின் ட்ரோன் தாக்குதல்களில் ரஷ்யா வின் இரு நகரங்களிலு ள்ள எண்ணெய்க் களஞ்சி யங்கள் தீப்பற்றி எரிவதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

கேஸ்டோவோ மற்றும் ஓரியோல் நகரங்களிலு ள்ள எண்ணெய்க் களஞ்சி யங்கள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள் ளன.

இவ்விரு நகரங்களும் நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர் இடைவெளியில் உள்ளன.

கேஸ்டோவோ நகரம் மொஸ்கோவுக்கு கிழக்கே 450 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது.

ரஷ்யாவின் பல நகரங் கள் மீது உக்ரைன் தாக் குதல்களை நடத்திய நிலை யில், இரு நகரங்களில் எண்ணெய்க் களஞ்சியங் கள் தீப்பற்றியுள்ளன.

இந்நிலையில் தீயை அணைப்பதற்கான நடவடிக் கைகளில் விசேட படை யினர் ஈடுபட்டனர் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (நி-5-6)


## ஆயுதங்களை இறக்கு
## இந்தியா தொடர்

(ஸ்டாக்ஹோம்)
உலக நாடுகள் தமது நாட்டின் பாதுகாப்பை பலப் படுத்துவதற்காக, இராணுவ ங்களையும் ஆயுதங்களை யும் அதிகரித்து வருகின் றன.

அந்த வகையில் உலக நாடுகள் போட்டியிட்டு அதிக ஆயுதங்களையும் இராணுவ தளவாடங்களையும் இறக் குமதி செய்து வருகின்றன.

அப்படி, இராணுவ தள வாட இறக்குமதி செய்வதில் இந்தியா தொடர்ந்து முதல் இடம் வகித்து வருவதாக ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறு வனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியி



ட்ட அறிக்கையின்படி, உலகளா விய ஆயுத இறக்குமதியில் இந் தியாவின் பங்கு 9.8% ஆக உள்ள தாக குறிப்பிட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இந்

தப் பட்டி
(8.4%),
உக்ரைன
(4.3%),
(4%), அ

## காசாவுக்கு பொருட்கள் அனுப்பிய சைப்பரஸ்

(காசா)
சைப்ரஸிலிருந்து உதவி பொருட்கள் அடங்கிய கப்பல் ஒன்று நேற்று முன்தினம் காசா நோக்கிப் பயணித்துள்ளது.

பைலட் திட்டத்தின் அடிப் படையில் ஸ்பெயின் நாட் டின் தொண்டு நிறுவன மொன்று க்கு சொந்தமான கப்பல் நேற்றுமுன்தினம் சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து பய ணத்தை ஆரம் பித்துள்ள தாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 200 தொன் நிறை யுடைய உதவிப்பொருட்கள் கப்பலில் கொண்டு செல்லப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன் சைப்பிர ஸில் மேலும் 500 தொன் உதவிப்பொருட்கள் இருப் பதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்த தயார்

# ஷ்ய ஜனாதிபதி

கா)

**ின் இறையாண்மை மற்றும் ுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ளைப் பயன்படுத்த மொஸ்கோ இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்துள்ளார்.**

போது


அணு ாராக

உள்ளன என்பதை அவர் தெரிவித்தார். உக்ரைன் போர்க்களத்தில் அணு ஆயுதங்களைப்பயன்படுத்துவதைப் பற்றி எப்போதாவது பரிசீலித்தீர்களா என்று கேட்டதற்கு, புடின் அதற்குத் தேவையில்லை என்று பதிலளித்தார். (நி-5-6)

# ஏவப்பட்ட சில வினாடிகளில் வெடித்து சிதறிய ரொக்கெட்

(டோக்கியோ)

ஜப்பானின் மேற்கு பகுதியில் உள்ள வகயாமா மாகாணத்தில் உள்ள ஏவுதளத்தில் இருந்து, ஸ்பேஸ் ஒன் நிறுவனத்தின் கைரோஸ் ரொக்கெட் நேற்று ஏவப்பட்ட சில வினாடிகளில் வெடித்து சிதறியது.



அரசின் ஒப்புதலின் நிலையில் ஜப்பானின் ஸ்டார்ட்அப் நிறுவனமான "ஸ்பேஸ் ஒன்" நிறுவனம் செயற்கைக் கோளை விண்ணில் செலுத்துவதற்கான ரொக்கெட் தொழில்நுட்ப பணிகளை மேற்கொண்டது.

அரசின் சிறிய அளவிலான சோதனை செயற்கைக்கோளை சுமந்தபடி சீறிப்பாய்ந்த ரொக்கெட், ஏவுதளத்தில் இருந்து புறப்பட்ட சில வினாடிகளில் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.


இதனால் அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. 18 மீற்றர் நீளமுள்ள ரொக்கெட் மற்றும் செயற்கைக் கோள் வெடித்து சிதறி தீப்பிடித்தன. இதையடுத்து ஸ்பிரிங்லர்கள் மூலம் தண்ணீர் தெளிக்கப்பட்டது.

இதனால் எரிந்துகொண்டிந்த பாகங்கள் சுற்றியுள்ள மலை சரிவுகளில் விழுந்தன.

ரொக்கெட் வெடித்து சிதறும்போது பதிவு செய்யப்பட்ட வீடியோ வெளியாகி உள்ளது.

செயற்கைக்கோளை வெற்றிகரமாக பூமியின் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்திய முதல் ஜப்பான் தனியார் நிறுவனம் என்ற பெருமையை ஸ்பேஸ் ஒன் நிறுவனம் பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதன் முதல் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. (நி-5-6)

# றக்குமதி செய்வதில் டர்ந்து முதலிடம்



களா இந் ள்ள இந்

தப் பட்டியலில் சவுதி அரேபியா (8.4%), கட்டார் (7.6%), உக்ரைன் (4.9%), பாகிஸ்தான் (4.3%), ஜப்பான் (4.1%),எகிப்து (4%), அவுஸ்திரேலியா (3.7%), தென்கொரியா (3.1%), சீனா (2.9%) உள்ளன.

இந்நிலையில், அதிக பட்சமான ஆயுதங்கள் ரஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. அதன்படி 36% ஆயுதங்களை ரஷ்யாவிடம் இருந்து இந்தியா இறக்குமதி செய்கிறது.

மேலும், பிரான்ஸிடமிருந்து 33% அமெரிக்காவிடமிருந்து 13% என ஆயுதங்களை இந்தியா இறக்குமதி செய்கிறது. இது 2018-2022 ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் இறக்குமதி உலக மொத்த ஆயுத விற்பனையில் 11 சதவீதமாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஹவுதியின் ஆளில்லா விமானங்களை சுட்டுவீழ்த்திய இத்தாலி போர்க்கப்பல்



(சனா)

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இரண்டு ஆளில்லா விமானங்களை இத்தாலியின் போர்க்கப்பல் சுட்டு வீழ்தியுள்ளது.

இந்த தகவலை இத்தாலியின் வெளியுறவு அமைச்சர் அன்டோனியோ தஜானி நேற்று முன்தினம் உறுதிபடுத்தியுள்ளார்.

ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களில் இருந்து செங்கடலில் வணிகக் கப்பல்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு இத்தாலிய போர்க்கப்பலான Caio Duilio அனுப்பி வைக்கப்பட்டது.

அதேவேளை, கடந்த மாதம் தொடங்கப்பட்ட ஐரோப்பிய பணி Aspides இன் ஒரு பகுதியாக இந்த கப்பல் ஹவுதியின் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியுள்ளது.

அத்தோடு, செங்கடலில் சுயஸ் கால்வாய் மற்றும் மத்திய தரைக்கடல் நோக்கி பயணிக்கும் மேற்கத்திய கப்பல்கள் மீதான தொடர்ச்சியான தாக்குதல்களால் இத்தாலிய பொருளாதாரம் பாதிக்கப்படலாம்என்று தஜானி பல எச்சரித்துள்ளார்.

இந்நிலையில், ஹவுதியின் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது தற்காப்பு நடவடிக்கை என இத்தாலிய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)





# சீனாவில் வெடிவிபத்து இருவர் உயிரிழப்பு

(பீஜிங்)

வடக்கு சீனாவின் குடியிருப்பு பகுதியிலுள்ள உணவகத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீன தலைநகரான பீஜிங்கின் கிழக்கே ஹெபெய் மாகாணத்தில் சான்ஹே நகரின் குடியிருப்புப் பகுதியிலுள்ள உணவகத்தில் பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த வெடி விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் 26 பேர் காயமடைந்துள்ளனர். உணவகம் முழுவதும் தீப்பரவியதில் நான்கு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்தது.


தீ விபத்து குறித்து தீயணைப்புத் துறையினருக்குத் தகவல் அளிக்கப்பட்டது.

முதற்கட்ட விசாரணையில் வாயு கசிவால் இவ்விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து பொலிஸார் தொடர் விசாரணை மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனேடிய உயர்ஸ்தானிகர்-அநுர சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஷ்க்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று காலை இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கையில் நிலவுகின்ற சமூக பொருளாதார மற்றும் அரசியல் நிலைமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய மக்கள் சக்தியின் திட்டங்கள் குறித்தும் இருதரப்பினருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாற்றிக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(நி-5-6)

## முட்டையின் விலை குறைப்பு!

(கொழும்பு)

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் வரம்புகள் இன்றி தேவையான அளவு முட்டைகளை கொள்வனவு செய்ய முடியும் என லங்கா சதொச தலைவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒரு முட்டை 43 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தள்ளுபடி நேற்று முதல் ஏப்ரல் 13 வரை செல்லுபடியாகும். (நி-5-6)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர்:- சின்னத்துரை பாலச்சந்தர்
விண்ணப்பதாரர் பெயர்:- சின்னத்துரை பாலச்சந்தர்
முகவரி:- முருங்கையப்புலம் வீதி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19. முருங்கையப்புலம் வீதியில் ஆதன இல. 30 இல் அமைந்துள்ள மல்லாகம் கோயிற்பற்று, அளவெட்டி இறை ஆலங்கட்டையடி என்ற ஆதனம் உரிமைகோருபவர் பாலச்சந்தர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.
குறித்த ஆதனமானது 31.10.2007 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிஸ் பொ.சுந்தரலிங்கம் அவர்கள் முகதாவில் இலக்கம் 2209 இல் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு பொ.சுந்தரலிங்கம் முகதாவில் 31.10.2007 ஆம் திகதிய 2209 ஆம் இலக்க உறுதியானது தாய் உறுதி இலக்கம் தோம்பு இலக்கம் எதுவும் குறிப்பிடாமல் குறித்த விண்ணப்பதாரருக்கு அவரது தாயார் அளவெட்டி மேற்கு முருங்கையற்புலம் சின்னத்தம்பி சின்னத்துரை கைம்பெண் அழகம்மா இந்த ஆதனம் எனது இடையூறற்ற தடையற்ற ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆட்சியும் சொந்த முமானதென வெளிப்படுத்தி அவரது மகனான சின்னத்துரை பாலச்சந்தருக்கு நன்கொடை அளித்துள்ளார்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "ஆலங்கட்டையடி" நிலப்பரப்பு பத்து குளி ஐந்து தசம் ஒன்று ஆறு (நிலப்பரப்பு 10 குளி 05.16) இது நிலஅளவையாளர் ம. சிற்றம்பலம் 1305ம் இலக்கத்தில் 11.10.2004 என திகதியிட்டு வரைந்த படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது.

**இதற்கு எல்லைகள்**

| | |
|---|---|
| கிழக்கு | :- ஒழுங்கை |
| வடக்கு | :- ஒன்பது அடி அகலமான பாதை |
| மேற்கு | :- சுப்பிரமணியம் செல்வராசாவின் ஆதனம் |
| தெற்கு | :- நடராசா தவராசாவின் ஆதனம் |

இது முழுவதும் இன்னும் குறித்த வடக்கெல்லைப் பாதைப் பாவிப்புரித்தும்

மேற்குறித்த ஆதனத்தை சின்னத்துரை பாலசந்தர் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் சின்னத்துரை பாலச்சந்தர் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(063)

## இன்று ஒரு தகவல் 64



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஐன்ஸ்டீன்

ஒரு சின்ன பையன். பார்க்கிறவர்கள் எல்லாம் அவனை ஒரு மண்டு என்று தான் சொல்லுவார்கள். அப்படி தான் அவனும் இருந்தான். இது மட்டும் இல்லை அவன் மிகவும் வெட்கப்படுவான். மற்ற பையன்களோடு விளையாடுவதற்கு அவனுக்கு மிகவும் வெட்கம். அதனால் அவன் வீட்டிலே இருக்கிற கோழிக்குஞ்சோடு தான் விளையாடிக்கொண்டு இருப்பான்.

அவன் ஒரு நாள் ஒரு வண்டியிலே ஏறிப் போயிருந்தான். கண்டெக்டர் டிக்கட்டும் - மீதி பணமும் கொடுத்தார். வாங்கி எண்ணிப் பார்க்கிறான். பணம் குறையிற மாதிரி அவனுக்கு தோணுகிறது. உடனே கண்டெக்டர் கிட்டே என்ன சார் பணம் குறைந்தல்லவா இருக்கிறது என்றான். கண்டெக்டர் பணத்தை வாங்கி மறுபடியும் எண்ணிப்பார்க்கிறார். அது சரியாகவே இருந்தது.

கண்டெக்டருக்கு எரிச்சல் என்னப்பா இது சரியாகத்தானே இருக்கிறது. உனக்கு கணக்கு தெரியாதா என்ன? உன்னோடு பெரியதொல்லையாகபோய் விட்டதே என்று சலித்தக்கொண்டார். சில்லறைப் பணத்தை சரியாகக் கூட்டி பார்க்கத்தெரியாத அந்த சின்னப் பையன் பெயர் என்ன தெரியுமா?

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். ஆமாம் அந்தப் பையன் தான் வளர்ந்து கணிதமேதையானது. பிற்காலத்திலே அவர் போட்ட கணக்கை உலகமே புரிந்து கொள்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டது.ஆல்பர்ட் ஐன்ஸ்டீனும் ஒரு புதிர் அவர் கண்டுபிடித்த ரிலேட்டிவிட்டி தத்துவமும் ஒரு புதிர். இப்படித்தான் எல்லாரும் சொல்லுவார்கள்.

மனித அறிவிற்கு இதுவரைக்கும் எட்டாமல் இருந்த ஒரு பெரிய தத்துவம். அதை அவர் புரிந்துகொண்டு விட்டார். அவர் புரிந்து கொண்ட அளவுக்கு மற்றவர்களையும் புரிய வைப்பதற்கு அவராலே முடியவில்லை. அதனாலே தான் இந்த தத்துவத்தைப் பற்றியே இது வரைக்கும் 900 புத்தகங்களுக்கு மேல் வைத்திருக்கிறார். எத்தனை புத்தகம் வைத்திருக்கிறது புரிகிறதே தவிர அதில் உள்ளதை புரிந்து கொண்டவர்கள் எத்தனை பேர் என்பது இன்னமும் தெரியவில்லை.

திப்பொருள் அழிந்து விடும்! ஆனால் அது மாதிரி காலமும் இடமும் அழியாது! நிலைத்து இருக்கும். இது முன்பு இருந்த விஞ்ஞானிகள் எல்லாம் கண்டுபிடித்து சொன்னார்கள். ஆனால் ஐன்ஸ்டீன் என்ன சொன்னார் தெரியுமா? திப்பொருள் எல்லாம் அழிந்து விடும் என்றால் காலமும் இடமும் அழிந்தே தீர வேண்டும் என்றார். அதை நிரூபித்தும் காட்டியுள்ளார்.

ஐன்ஸ்டீன் ஒரு தடவை ரயில்லே போகும் போது அவருக்கு பசி! ஏதாவது சாப்பிட்வேணும் என்று தோன்றியது! அதனால் ரயில்வே சிற்றுண்டிக்கடைக்கு சென்று என்ன இருக்கு சாப்பிடுவதற்கு என்று கேட்டிருக்கிறார். அங்கே வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் எழுதியிருந்த பட்டியல் ஒன்றை இவரிடம் கொடுத்திருக்கார்.

அதை படித்துப் பார்க்கலாம் என்று நினைத்து சட்டைப்பையிலே கண்ணாடியைத் தேடியிருக்கிறார் கிடைக்கவில்லை எங்கேயே தவறவிட்டுவிட்டார். பட்டியலை அந்த வேலையாளிடமே கொடுத்து இதை நீயே வாசித்துகாட்டப்பா என்று கேட்டிக்கிறார். அதற்கு அந்த ஆள் நானும் உங்களை மாதிரித் தான் சார் படிக்கத்தெரியாது என்று சொல்லியிருக்கிறான். அவருக்கு வந்த சிரிப்பிலே பசி கூட மறந்து போய்விட்டதாம்.

பொதுவாக ஒரே விடயத்திலே ஆழ்ந்த சிந்தனையில் உள்ளவர்கள் மற்ற விடயத்திலே அதிகமாக அக்கறை காட்டுவதில்லை. ஐன்ஸ்டீனைப் பற்றி இன்னொரு கதையும் சொல்லுவார்கள். இப்போது எல்லோரும் குளிக்கிறதுக்கு என்று ஒரு சோப் ஷேவிங் செய்து கொள்வதற்கு ஒரு சோப் இப்படித்தானே வைத்துக்கொள்வது வழக்கம்.

இரண்டும் வெவ்வேறு விதம். ஆனால் ஐன்ஸ்டீன் இப்படி தனித்தனியாக இரண்டு சோப் வைத்துக் கொள்ளவில்லை குளிக்கவும் ஷேவிங் செய்யவும் ஒரே சோப் தான் உபயோகப்படுத்தினார். அதை பார்த்துவிட்டு மற்றவர்கள் கேட்டிருந்தார்கள் ஏங்க இப்படி? தனித்தனியாக இரண்டு சோப் வைத்துக் கொண்டால் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர் அப்படி வைத்துக்கொண்டால் அது என்னை குழப்பத்திற்குள்ளாக்கி விடும் என்றார்.

இவருடைய தத்துவம் உலகத்தையே குழப்பம் செய்து இருக்கிறது ஆனால் இவர் எங்கே குழம்பியிருக்கிறார் பார்த்தீர்களா? இவ்வளவும் சொல்லி விட்டு நான் இறுதியில் சொல்ல வரும் விடயம் என்ன தெரியுமா? பெரிய மேதைகள் எல்லாம் ஞாபகமறதிக்காரர்களாக இருக்கலாம். ஆனால் ஞாபக மறதி இருக்கிறவர்கள் எல்லாம் மேதைகள் என்று நினைத்து விடாதீர்கள். அப்படிப் பார்க்கப் போனால் என்னுடைய நண்பர்கள் பலபேர் மேதைகள். என்னுடைய நண்பர் ஒருவருக்கு மிகவும் மறதி அதற்காக ஒரு டொக்டரிடம் போனார்.

டொக்டர் எனக்கு எதையும் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள முடியவில்லை. கொஞ்ச நேரத்திற்குள்ளே மறந்து போய்விடுகிறேன். நீங்க தான் ஏதாவது மருந்து கொடுத்து இதை சரி செய்ய வேண்டும் என்றார். சரி உங்களுக்கு எத்தனை நாளாக இது இருக்கு என்று கேட்டார். உடனே இவர் என்ன சொன்னார் தெரியுமா? எது எத்தனை நாளாக இருக்கு என்று கேட்டீங்க?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பலகைகள் அகற்றம்

(மன்னார்)

மன்னார் நகரசபை எல்லைக்குள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தக நிலையங்களில் உரிய அனுமதி பெறாது வரி செலுத்தாது காட்சிப்படுத்தப்பட்ட விளம்பர பலகைகள் நேற்று புதன்கிழமை மன்னார் நகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டுள்ளது.

விளம்பர பலகைகளுக்கு அனுமதி பெற்று வரியை செலுத்தி காட்சிப்படுத்துமாறு நகர சபையினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் கடிதங்கள் அனுப்பப்பட்டும் உரிய அனுமதியை பெறாத வர்த்தக நிலையங்களின் விளம்பர பலகைகளே இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன.(நி-5-6-33)

# விசுவமடு-உடையார்கட்டு தெற்கு வரை யானைவேலி அமைக்கப்பட வேண்டும்

(அக்கராயன்)

கிளிநொச்சி கல்மடுவில் இருந்து விசுவமடு தொட்டியடி வரை யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் விசுவமடுவில் இருந்து உடையார்கட்டு தெற்கு வரை அமைக்கப்பட வேண்டிய யானைவேலி அமைக்கப்படாததன் காரணமாக யானைகள் விசுவமடு மேற்கு குடியிருப்பு பகுதிகளுக்குள் நாளும் வருகை தருவதாக தெரிவித்தனர்.

பிரதேச மட்ட கூட்டங்களில் பல தடவைகள் யானைகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-5-6-350)



முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியின் உதைபந்தாட்ட துறையை முன்னேற்றும் நோக்குடன் புதிய உதைபந்தாட்ட மைதானம் கடந்த 5 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. (படம்-கிருஷ்ணகுமார்)

# 'பன்னிருமாத ஒளிவிளக்கு' நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுப்பு

(கண்டாவளை)

நாடளாவிய ரீதியில் கலாசார அமைச்சியின் ஊடாக அமைதியான வளர்ச்சியடைந்த பூரணமான அழகான இலங்கை மானிட சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் வருடாந்தம் "பன்னிருமாத ஒளி விளக்கு" நிகழ்ச்சித் தொடர் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகிறது.

அந்த வகையில் கலாசார மற்றும் கலை நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வேலைத் திட்டத்தின் ஊடாக இரணை மாதாநகர் பகுதியில் மூன்று கலைஞர்களுக்கு தலா 5,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், கிராமிய நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரணை மாதாநகர் பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. (நி-5-6-315)

# வறட்சியான காலநிலையால் நீர்நுகர்வு அதிகரிப்பு

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

(கொழும்பு)

வறண்ட வானிலையால் நீர் நுகர்வு 15 சதவீதம் அதிகரித்துள்ளது.இதன் காரணமாக குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதுவரை எந்தவொரு பிரதேசத்திலும் நீர் வெட்டு அமுல்படுத்தப்பட வில்லை எனவும் நீர்வள சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர் வாரியம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

தற்போது நிலவும் வறட்சியான கால நிலை அடுத்த மாதமும் தொடரும் என எதிர்பார்க்கப் படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## நிலவும் கடும் வெப்பம்

# குடிநீர் இடைநிறுத்தத்தால் நெருக்கடிக்கு உள்ளான மக்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் கடந்த 15 நாட்களுக்கு மேலாக குடிநீர் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை யினால் அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள நீர்த் தாங்கியில் இருந்து 250 வரையான குடும்பங்களுக்கு அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் குடிநீர் வழங்கப்பட்டு வரும் நிலையில் கடந்த 15 நாட்களுக்கு மேலாக குடிநீர் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கடும் வெப்பம் நிலவும் நிலையில் குடிநீர் நிறுத்தப்பட்டுள்ளது பயனாளிகளை பாதித்துள்ளது. குடிநீர் வழங்கலுக்கான மின்சாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதன் காரணமாகவே குடிநீர் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்என இக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-5-6-350)

# மின் விளக்குகளை சீர் செய்யும் பணி முன்னெடுப்பு

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் ஒளிராத மின் விளக்குகளை ஒளிரச் செய்யும் நடவடிக்கையில் பூநகரி பிரதேச சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

பூநகரி பிரதேசத்தில் பிரதேச சபையினரால் கடந்த காலங்களில் பொருத்தப்பட்ட மின் விளக்குகள் பல இடங்களில் ஒளிராத நிலைமையில் காணப்பட்ட நிலையில் பொது மக்களினால் பிரதேச சபைக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டன. இதனடிப்படையிலேயே தற்போது திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

முழங்காவில் வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் மட்டும் ஒளிராத நிலையிலிருந்த 48 வீதி விளக்குகள் திருத்தப்பட்டு பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Engineering,Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்.<br>தொ.இ: B/14123 | பிறப்பு-1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்:கணக்காய்வாளர். (விவாகரத்தானவர்)<br>எதிர்பார்ப்பு: தகுதியான மணமகன். விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: G/475 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 30<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பட்டதாரி. Software Engineer(Canada)<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள படித்த பெண்<br>தொ.இ: B/14124 | பிறப்பு-1994 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: - 52<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்:BA,MA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.(பட்டதாரி)<br>தொ.இ: G/14290 |
| பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம் : பூரம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Certificate in Audiometrician,Audiometrician<br>எதிர்பார்ப்பு : தொழில் புரிபவர்<br>தொ.இ: B/14127 | பிறப்பு -1995 இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா: - 27 1/2<br>உயரம் :167 CM<br>தகைமை/தொழில்: Diploma in Information Technology (Reading)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/14294 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம் : உத்திரட்டாதி<br>கி.பா: 19 1/2<br>உயரம்: 170 cm<br>தகைமை/ தொழில்: Bsc,Msc,Phd,Civil Engineer(Canada).<br>எதிர்பார்ப்பு: Bsc,IT Degree Holder,Accountant,Engineer<br>தொ.இ: B/14129 | பிறப்பு -1989 இந்து<br>நட்சத்திரம் - அவிட்டம்<br>கி.பா: 9 3/4<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு : உத்தியோகம்<br>தொ.இ: G/14306 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 430





கத்தியைப் பிடுங்கியதும் வந்தியத்தேவனைக் கடுங் கோபத்துடன் பார்த்த பூங் குழலி மேற்கூறிய சப்தத் தைக் கேட்டதும் கத்தி விழு ந்த இடத்தை ஆர்வத்துடன் நோக்கினாள். பிறகு இரு வரும் வியப்புடன் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண் டார்கள்.

மெள்ளமெள்ள நடந்து கத்தி விழுந்த இடத்துக்கரு கிலிருந்து புதரை நெருங் கிப் பார்த்தார்கள். செடிக ளிலும் தரையிலும் புது இரத் தம் சிந்தியிருந்தது. மற்ற படி அங்கு மனிதரும் இல்லை விலங்கும் இல்லை. பூங்கு ழலியின் கத்தியையும் காண வில்லை!

"பார்த்தாயா பூங்குழலி! நான் கூறியதன் உண்மை இப்போதாவது தெரிகிறதா? இளவரசரை நாலா பக்கமும் அபாயங்கள் சூழ்ந்திருக்கின் றன. எந்த நேரத்தில் எந்த இடத்திலிருந்து எப்படிப் பட்ட அபாயம் வருமென்று சொல்ல முடியாது. தற்செய லாக உன்னுடைய கத்தியைப் பிடுங்கி நான் விட்டெறிந் தேன். அதிலிருந்து இங்கே யாரோ பதுங்கிக் கொண் டிருந்தது தெரிய வந்தது. எதற்காக பதுங்கியிருக்க வேண்டும் என்று நீயே யோசி த்துப் பார்! இளவரசரைச் சமயம் பார்த்துத் தீர்த்துக் கட்டுவதற்காகத்தான்! கோடி க்கரைக்கு நான் வந்ததற்கு முதல் நாள் இரண்டு பேரை உன் அண்ணன் படகேற்றி அழைத்துப் போனதாகவும், அவர்களைப் பற்றி உனக்குச் சந்தேகம் தோன்றியதாகவும் சொல்லவில்லையா? அதை ஞாபகப்படுத்திக் கொள்! இப்படிப்பட்ட சமயத்தில் இளவரசரிடம் பிரியம் உள்ள வர்கள் அவரை விட்டுப் போக லாமா?" என்று வந்தியத் தேவன் மூச்சு விடாமல் பேசி நிறுத்தினான்.

"அவர் என்னைப் போகச் சொன்னால் என்ன செய்வது?" என்று பூங்குழலி கேட்டாள்.

"அவர் போகச் சொன்னா லும் நாம் போகக்கூடாது!"

பூங்குழலி சற்று யோசித் துவிட்டு, "இங்கே பதுங்கி யிருந்தது யார் என்று கண்டு பிடிக்க வேண்டாமா?" என் றாள்.

"அது நம்மால் முடியாத காரியம். இந்த அடர்ந்த காட் டில் எங்கேயென்று தேடிக் கண்டுபிடிப்பது? அதிக நேரம் தாமதித்தால் இளவரசருக்கு உண்மையாகக் கோபம் வந்து விடும். நம்மை விட்டுவிட்டு எல்லாரும் போய்விடுவார் கள்! பேசாமல் என்னுடன்வா"

"சரி வருகிறேன்!" என்று பூங்குழலி கூறினாள்.

இருவரும் மற்றவர்கள் இரு ந்த மண்டபத்தை நோக்கி நடந்தார்கள்.

மண்டபத்திலிருந்தவர்கள், வந் தியத்தேவனும் பூங்குழலி யும் அருகில் வந்ததும், மேற் படி சம்பவத்தைப்பற்றியே கேட்டார்கள்.

"எதற்காகக் கத்தியை எறிந் தாய்? 'வீல்' என்ற சத்தம் கேட்டதே, அது என்ன சத் தம்?" என்று வினவினார்கள்.

"புதரில் ஏதோ மிருகம், சிறுத்தையோ அல்லது நரியோ பதுங்கியிருந்ததுபோல் தோன் றியது. அதனால் இவளு டைய கத்தியைப் பிடுங்கி வீசி எறிந்தேன். கிட்டப் போய்ப் பார்த்தோம். ஒன் றும் இல்லை" என்றான் வந் தியத்தேவன்.

"அது போனால் போக ட்டும் இந்தப் பெண்ணிடம் கேட்க வேண்டியதைக் கேளு ங்கள்!" என்றார் சேநாதி பதி.

பூங்குழலி வந்ததிலிரு ந்து இளவரசரையே பார் த்துக் கொண்டிருந்தாள். இளவரசர் அப்போது அவளை ஏறிட்டுப் பார்த்தார்.

'சீச்சீ! இந்த நெஞ்சு எதற் காக இப்படி அடித்துக் கொள் கிறது? தொண்டையில் வந்து ஏதோ அடைக்கிறதே, அது என்ன? கண்ணில் எதற்காகக் கண்ணீர் தளும்புகிறது! அச ட்டுப் பெண்ணே! உன் தைரி யம் எல்லாம் எங்கே போயி ற்று? அலை கடலையும், பெரும் புயலையும் கண்டு கலங்காத உன் உள்ளம் ஏன் இப்போது இப்படித் தத்த ளிக்கிறது? கொடிய பயங்கர வேங்கைப் புலியின் கொள் ளிக் கண்களை ஏறிட்டுப் பார்க்கும் துணிவு படைத்த உன் கண்கள் ஏன் இப்போது மங்கல் அடைகிறது!

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உதவும் நல்ல மனசு

ஒரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகி யவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந் தன. ஆனாலும் அவை களுக்குள் அழகு குறி த்து அடிக்கடி விவா தங்கள் எழும். ஒவ் வொன்றும் தன் பெரு மையைப் பறை சாற் றும் விதத்தில் பேசும்.



முயல் மட்டும் மௌனமாக இருக்கும். "நம் நால்வரில் இனத் திலிருந்துதான் தோன் றியதாகச் சொல்வார் கள்!" குதித்து குதி த்து நடன மாடிய படி சொல்லியது குரங்கு.

"நாங்கள் மனிதர் களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கின் றோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக் கிறது. எனவே நான் தான் அழகு தேவதை!" என்றது எலி.

"மனிதர்கள் திட் டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற் றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந் தாலும் கிளியின் நிறத் தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

"நான் இந்த அழகுப் போட்டிக்கே வர வில்லை!" முயல் சொல்ல மூன்றும் சேர்ந்து சிரித் தன.

முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது. "என்ன இரு ந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனி தான்!" குரங்கு சொல் லியது.

"ஆமாம்! ஆமாம்!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி. "நிற மும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்தி சாலித் தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொ ழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடி யும்" என்றது எலி.

"எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக் குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி.

"போட்டி நடத்த லாம். ஆனால் நடு வர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானி ருக்கிறேன்!" திடீரெ ன்று ஒரு சத்தம் கேட் டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத் தின் மீது ஒரு காகம் இருந்தது.

"நீங்கள் எப்படி?" ஆச்சரியப்பட்டது குரங்கு.

"நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிரு ந்ததை நான் கேட் டேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
~ காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வட மாகாண நிர்வாகத்தில் அதிகாரப் பகிர்வு வேண்டும்

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மாகாண சபை நிர்வாக முறைமை கொண்டு வரப்பட்டது.

அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் அனைத்து மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபை நிர்வாகம் முதலில் வடக்கு மாகாணத்திலேயே தோல்வி கண்டுள்ளது.

இதற்கு இரண்டு விடயங்கள் மூலகாரணமாக இருந்துள்ளன.

அதாவது, வடக்கு மாகாணத்தின் ஆளுநர் சர்வாதிகாரப் போக்குடையவராக இருக்கும்போது, வடக்கு மாகாணத்தின் அத்தனை அமைச்சுக்களின் செயலாளர்களும் ஆளுநருக்கு நடுங்கி ஒடுங்கி நின்றனர்.

இதற்கு ஜீ.ஏ.சந்திரசிறி வடக்கின் ஆளுநராக இருந்த காலத்தை உதாரணப்படுத்தலாம்.

மாறாக வடக்கின் ஆளுநர் அமைதியானவராக, கருசனையற்றவராக இருக்கும்போது, அமைச்சுக்களின் செயலாளர்கள் ஜீ.ஏ.சந்திரசிறியாக மாறிவிட, அவர்களுக்குக் கீழ் இருக்கும் பணிப்பாளர்களும் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் எதுவும் செய்ய முடியாமல் நடுங்கி ஒடுங்கி நிற்கின்றனர்.

ஆக, ஒன்றில் ஆளுநர் நாட்டாமைத்தனத்துடன் இருக்கிறார். இல்லையென்றால் அமைச்சின் செயலாளர்கள் சர்வாதிகாரிகளாக மாறி ஒட்டுமொத்த நிர்வாகத்தையும் குதறிவிடுகின்றனர்.

இதற்கு உதாரணமாக வடக்கு மாகாணத்தின் அண்மைக்காலப் போக்கை குறித்துரைக்க முடியும்.

ஆக, வடக்கு மாகாணத்தில் இன்னமும் அவரவர் பதவிக்குரிய அதிகாரங்கள் முறையாக வழங்கப்படவில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இந்த நிலைமை இருக்கும்போது எவரும் தமது கடமைகளை பதற்றமின்றி – உரிய பிரமாணக் குறிப்புகளுக்கு அமையச் செய்ய முடியாமல் போகும்.

தவிர, இத்தகைய நிலைமைகள் உத்தியோகத்தர்களிடமிருந்து முழுமையானதும் திறமையானதுமான உழைப்பை வெறமுடியாத நிலைமையையும் உருவாக்கும்.

இங்கு அதிகாரப் பகிர்வு வேண்டும் எனக் கோருகின்ற நாம் முதலில் கிடைத்த அதிகாரப் பகிர்வுக்கு என்ன? நடக்கிறது என்பதை கண்டறிவது அவசியம்.

கூடவே வடக்கின் ஆளுநராக யார் இருந்தாலும் அவர் களத்தில் இறங்கி யதார்த்த நிலைமைகளை அறிய வேண்டும்.

துறைத் தலைவர்களுடன், பணிப்பாளர்களுடன் கதைக்க வேண்டும்.

இதைவிடுத்து குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கொண்டு அமைச்சின் செயலாளர்களுடன் கதைப்பதனூடாக நிர்வாகம் நடத்த நினைத்தால், எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

# அஞ்சல் திணைக்களத்தின் பெயரில் மோசடிகள்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

அஞ்சல் திணைக்களத்தின் பெயரைப் பயன்படுத்தி குறுந்தகவலை அனுப்பி இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுபோன்ற குறுஞ்செய்திகளுக்கு மக்கள் தங்கள் ரகசிய தகவல்களை வழங்குவதை தவிர்க்குமாறு அஞ்சல் திணைக்களம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இலங்கை அஞ்சல் மூலம் விநியோகிக்கப்படும் பொதிகளுக்கான கட்டணத்தை செலுத்துமாறு பொதுமக்களுக்கு போலியான குறுஞ்செய்தி அனுப்பிகடனட்டை தரவு திருட்டு மோசடி இடம்பெற்று வருவதாக தெரிய வந்துள்ளது.

இலங்கை அஞ்சல், இலங்கை அஞ்சல் திணைக்களம், SL POST, Sri Lanka Post போன்றவற்றின் பெயர்களைப் பயன்படுத்தியும் இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைப் பயன்படுத்தியும் இந்த மோசடி இடம்பெற்று வருகிறது.

இதன்படி, கடனட்டை தொடர்பான தகவல்களை குறுஞ்செய்தி மூலம் விசாரிக்கும் போது அதனை வழங்க வேண்டாம் என்றும், கடனட்டை மூலம் பொதி தொடர்பான எந்தப் பரிவர்த்தனையும் மேற்கொள்ளப்படாது எனவும் அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அறிய விரும்பினால், அஞ்சல் திணைக்களத்துன் ஹெல்ப்லைன் 1950, தகவல் தொழில்நுட்பப் பிரிவு 011 254 2104, 011 233 4728, 011 233 5978, 011 268 7229, 011 233 0072 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். (ம-7,10)

## 19 ஆம் திகதி முதல் தகவல் தொழில்நுட்ப பாடத்தில் திருத்தம்

(கொழும்பு)

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் அரச பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டத்தை திருத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இந்த முன்னோடித் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அரச பாடசாலைகளின் கல்வி முறையில் தரம் 08 முதல் 13 ஆம் தரங்களுக்கு செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில்தேவையான உதவிகளைவழங்குவதற்கு Microsoft அமைச்சுடன் கைகோர்த்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த புதிய தகவல் தொழில்நுட்ப பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பாட அறிவை வழங்க முடியும் என்றும் கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)

## புதுக்குடியிருப்பில் விஷேட சோதனை

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் பொலிஸார்மற்றும்விஷேட அதிரடிப் படையினர் இணைந்து விஷேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாட்டில் போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட நடவடிக்கையான 'யுக்திய' வின் ஒரு பகுதியாகவே புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த நடவடிக்கையில் பொலிஸார், விஷேட அதிரடி படையினர் ஆகியோர் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததுடன் எதுவிதமான சந்தேகத்திற்கிடமான பொருட்களும் மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## விசா விதிகளை மீறிய 21 இந்தியர்கள் கைது

(கொழும்பு)

இலங்கையின் விசா விதிமுறைகளை மீறிய குற்றத்தில் 21 இந்தியர்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று முன்தினம் நீர்கொழும்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த கைது நடவடிக்கை தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட முதற்கட்ட விசாரணைகளில் போது குறித்த சந்தேகநபர்கள் சுற்றுலாவிசாவில்இலங்கை வருகை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்கள் குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இணைய வழி வர்த்தக நிலையம் ஒன்றினை நடத்தி வந்துள்ளனர்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான முன்னோடித் திட்டத்தின் (pilot project) ஒரு பகுதியாக மார்ச் 31 வரை பல நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் இலவச விசா (visa - free ) வசதியை சந்தேக நபர்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளமை இதன்போது தெரிய வந்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள சட்டத்தின் படி, சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வருபவர்கள் ஊதியம் அல்லது ஊதியம் இல்லாத வேலைகளில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறும் விதமாக செயற்பட்டமையினாலேயே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட இந்தியர்கள் வெலிசரவில் உள்ள திணைக்கள தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-7,10)

## சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் புதிய பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக எயார் வைஸ் மார்ஷல் எச்.எம்.எஸ்.கே.பி கொடதெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையின் பரிந்துரையின் பிரகாரம் துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையின் புதிய பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய ஜயகாந்த அண்மையில் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி-2024 இன்று வியாழக்கிழமை (14.03.2024) பிற்பகல் 2.00 மணிக்கு மயிலணி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் பா.பார்த்தீபன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கலாதீபன் பிரதம விருந்தினராகவும், யாழ். சில்லாலை றோ.க.த.க பாடசாலையின் அதிபர் திருமதி. ஏ.சண்முகநாதன் சிறப்பு விருந்தினராகவும், சுன்னாகம்சிவன் முன்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. கே.அம்பரீசன், மயிலணி வளர்பிறை முன்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி.சா.தவேஸ்வரன், சுன்னாகம் கலைவாணி முன்பள்ளியின் தலைமை ஆசிரியர் திருமதி. ம.மனோகரன் மற்றும் பழைய மாணவர் பொ.சிறிரஞ்சன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

21



உலகம் முழுவதும் தமிழ் ஆய்வை மேற்கொண்டு, சிதறிக் கிடக்கின்ற சிறு நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துதல், தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பொதுவானவற்றைப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல், பிற நாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழைப் பாடமாக அமைத்தல், அப்பல்கலைக்கழகப் பேராசிரியர்களைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடச் செய்தல், தமிழ்மொழி, தமிழ்க் கலை, தமிழிலக்கியம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றைப் பற்றி பல்கலைக்கழகத் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் செயற்பட இம்மன்றம் தொடங்கப்பட்டது.

உலகிலுள்ள அறிஞர் பலரை ஒன்று சேர்த்து, அவர்களை அறிமுகப்படுத்தி, அவர்களது ஆராய்ச்சிகளை வெளிப்படுத்த உதவும் வகையில் இரண்டாண்டுகட்கு ஒருமுறை "உலகத் தமிழ் மாநாடு" நடத்த இம்மன்றம் முடிவு செய்து, மாநாடு நடத்தவிரும்பும் நாடுகள் இம்மன்றத்தின் ஒத்துழைப்புடன் மாநாடுகளைச் சிறப்புற நடத்த வழி செய்தது. இம்மன்றத்தின் முதல் உலகத் தமிழ் மாநாடு 1966 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடத்தப் பெற்றது.

**இதன் செயற்றிட்டங்களாக பின்வருவன இருந்தன.**

1. தனி மனித மற்றும் நிறுவன உறுப்பினர்களைச் சேர்த்தல்.
2. சங்க இலக்கியங்கள் பற்றிய பயிலரங்குகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துதல்.
3. சங்க இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளை ஓவ்வொரு நாட்டிலும் உள்ள தமிழ் ஆய்வு நிறுவனங்களுடனும் தமிழ் அறிஞர்களுடனும் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுதல்.
4. தேசியக்கிளைகள் அமைத்து, மேற்கண்ட தமிழியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
5. மக்களிடையே தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய சிறப்புகள் ஆகியவற்றை பரப்புவதற்காக செய்திமடல்கள், இதழ்கள், தனி வரைவு நூல்கள் போன்ற வெளியீடுகளை தேசியக் கிளைகள் வெளியிடுதல்.
6. மன்றத்தின் தனித்தன்மையை இழக்காமல், பிற நிறுவனங்களோடு இணைந்து மன்றத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லுதல்.
7. மன்றத்தின் நோக்கங்களை மேம்படுத்தும் வகையில் தமிழியல் ஆய்வில் ஈடுபடுபவர்களுக்கு விருதுகள், உதவித்தொகை, மாநாடுகளில் கலந்துகொள்ள பயணப்படி போன்றவற்றை வழங்குதல்.
8. சங்க இலக்கியங்களை பிற மொழிகளில் மொழிபெயர்த்தல்.
9. மொழிபெயர்த்த சங்க இலக்கியங்களை பதிப்பித்து வெளியிடல்.
10. உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துதல்.
11. உலகத் தமிழர்களின் தமிழ்க்கல்வித் தேவையை நிறைவேற்ற உலகத்தமிழ் அமைப்புகளோடும் உலகளாவிய தமிழ்ச்சங்கங்களோடும் இணைந்து செயற்படல்.
12. மன்ற வெளியீடாக "உலகத் தமிழ் பண்பாட்டு இதழ் ஒன்றை வெளியிடல்.

**உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகள் பற்றிய விமர்சனங்கள்**

தமிழ்நாட்டில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் அரசியல் இலாபங்களுக்காக நடத்தப்படுகின்றன என்றும், அரசியல் தலையீடுகள் மன்றத்தின் கல்விசார் சுதந்திரம் கேள்விக் குறியாக்கின்றது என்றும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நடைபெற்ற மூன்று உலகத் தமிழ் மாநாடுகளும் அரசியல் லாபத்தை எதிர்நோக்கி நடத்தப்பட்டவையே. 1967 இல் தி.மு.க. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததைக் கொண்டாடும் விழாவாக சென்னையில் இரண்டாம் மாநாடு 1968-இல் நடைபெற்றது. 1981 இல் மதுரையில் நடந்த மாநாடும், 1995 இல் தஞ்சாவூரில் நடந்த மாநாடும் அ.தி.மு.க வின் அந்தந்தக் காலத் தேர்தல்களுக்குக் களம் அமைப்பதை எதிர்நோக்கி நடத்தப்பட்டன. மலேசியா, இலங்கை, பிரான்ஸ், மொரீசியஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகள் புலம் பெயர்ந்த தமிழர்களின் அச்சத்தைப் போக்கி, அவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவதில் அந்தந்த நாட்டு அரசியல் கட்சிகளுக்கு உதவின.

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது அரசின்தலையீடு ஆய்வரங்க அமைப்பையும் பாதித்த போது, தமிழாராய்ச்சி மன்றத்தின் கல்வி சார் சுதந்திரம் கேள்விக் குறியானது. ஆய்வரங்களில் பங்கேற்க வந்த இலங்கைத் தமிழறிஞர்களும், வெளிநாட்டு அறிஞர்களில் சிலரும் வெளியேற்றப்பட்டனர். இந்த நிகழ்வு உலக நாடுகளின் முன்தமிழாராய்ச்சி மன்றத்துக்குத் தலை குனிவை ஏற்படுத்தியது.

**உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை தடமாற வைத்த செம்மொழி மாநாடு**

இந்த நிலையில், 15 ஆண்டுகளுக்குப் பின்னர் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் நிர்வாக அமைப்பைத் தடமாற வைத்த பெருமையைக் கோவையில் நடந்த முதலாம் செம்மொழித் தமிழ் மாநாடு வாரிக் கொண்டது. ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாட்டை 2010 ஜனவரியில் நடத்தப்போவதாக உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் ஒப்புதல் இல்லாமலேயே தமிழக அரசு அறிவித்தது.

2009 செப்டம்பரில்தான் மன்றத்தின் தலைவரான நொபுரு கரஷிமாவுக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது. உலகளாவிய மாநாடொன்றை நான்கே மாதங்களில் நடத்துவது சாத்தியமல்ல குறைந்தது ஓராண்டுக் காலமாவது வேண்டும் என்ற கருத்து தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், மாநாட்டை நடத்துவதற்கு இரண்டு முன் நிபந்தனைகளையும் மன்றம் வலியுறுத்தியது.

1. கிட்டத்தட்ட 5,000 பக்கங்களில் 5 தொகுதிகளாக அச்சிட்டு 2005 இலேயே விநியோகத்துக்குத் தயாராக இருந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஆய்வேடுகளை உடனடியாக வெளியிட வேண்டும்.

2. மாநாட்டின்போது ஆய்வரங்குகளுக்கும் உடன் நிகழும் அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் இடையே தெளிவான எல்லை வரையறுக்கப்பட வேண்டும்.

**கருத்து மோதல்கள்**

இந்த இரண்டு நிபந்தனைகளையும் தமிழக அரசு ஒப்புக்கொண்டாலும், அரசு முன் வைத்த திகதியை கரஷிமா ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், கரஷிமாவுக்கும் மன்றத்தின் துணைத்தலைவர்களான வி.சி.குழந்தைசாமி, ஐராவதம் மகாதேவன் போன்றோருக்கும் இடையே கருத்து மோதல்கள் வெடித்தன.

குழந்தைசாமி, உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் கூட்டத்தைக் கூட்டி, நடுவண் குழுவின் ஒன்பது உறுப்பினர்களில் ஆறு பேரின் ஒப்புதலைப் பெற்று மாநாடு நடத்துவதற்கான இசைவை அன்றைய தமிழக முதலமைச்சருக்குத் தெரிவித்தார். தமிழாராய்ச்சி மன்றத்தின் ஏகமனதான ஒப்புதலின்றி உலகத் தமிழ் மாநாட்டை நடத்துவதில்லை என்பதில் தீர்மானமாக இருந்த அன்றைய முதலமைச்சர், உலகத் தமிழ் மாநாட்டுக்குப் பதிலாக முதலாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை கோயம்புத்தூரில் 2010, ஜூன் மாதம் அரசே நடத்தும் என்று அறிவித்தார்.

இந்தமோதல்களின் எதிரொலியாக, கரஷிமா மன்றத் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

தொய்வு நிலையில் காணப்பட்ட இம் மன்றம் பேராசிரியர் நொபொருகரஷிமா போன்ற உலகத் தமிழ் ஆய்வாளர்களின் விருப்பத்திற்கமைய உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் 2016 ஆம் ஆண்டில் இந்தியாவில் World Tamil Research Association என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு, புத்துயிர் பெற்றது.

**முதல் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு**

தனிநாயக அடிகளார்அப்பொழுது (1961-1970) மலேசியப்பல்கலைக் கழகத்திலே இந்தியக் கல்வியாய்வுகள் துறையிலே தலைமை வகுத்துக் கொண்டிருந்தார். அவர் ஏற்கனவே தனது "தமிழ்கலாசாரம்" எனும் காலாண்டு இதழ் மூலம் உலகம் முழுவதிலுமுள்ள தமிழ், திராவிடஆர்வலரை ஒன்று சேர்க்க முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டவர். அவர் மலேசிய அரசு தமிழ்ச்சமூகத்திற்கு அளித்த ஆதரவின் துணையோடு பிரம்மாண்டமான முறையிலே முதல் மாநாடு கோலாலம்பூரிலே 1966 ஏப்ரல் 16-23 திகதிகளில் (எட்டுநாட்கள்) நடத்தப்பட்டது. இந்த மாநாட்டில் அன்று தமிழியல் ஆய்வில் பங்கெடுத்த பல்லின ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு**

1967 இல் சி.என்.அண்ணாத்துரை தலைமையிலான திமுக வெற்றி பெற்றுத் தமிழ்நாட்டிலே அரசமைத்தது. எம்.பக்தவத்சலம் முன்பு கோலாலம்பூரிலே விடுத்த அழைப்பினை ஏற்றுச் சென்னையிலே திமுக இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை நடத்த முன்வந்தது. அது 1968 ஆம்ஆண்டு ஜனவரி 3-10 ஆம் நாட்களில் (எட்டுநாட்கள்) சென்னையிலே நடந்தது. அதே காலத்திலே "பூம்புகார்" பொது மக்கள் விழாவும் முக்கியத்துவம் பெற்றது

இந்தமாநாட்டின் முதல் நாளில் சென்னைகடற் கரையில் 9தமிழ் அறிஞர்களின் சிலைகள் எடுக்கப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்வாயில்...

சுரேஷ் விஜயகாந் (வயது-29) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று புதன்கிழமை நண்பகல் அவர் வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,10,60)

## மீன்பிடிக்கச்...

துள்ளார்.

ஏனைய மீனவர்களின் உதவியுடன் குறித்த மீனவர் கரைக்கு கொண்டு வரப்பட்டு, தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.

சடலம் மன்னார் பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகள் இடம்பெற்றன. (ம-7,10)

## யாழ்.பல்கலைக்...

கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஒன்பது அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை பல்கலைக்கழகத்தின் யூரியூப் சனல் மற்றும் முகப்புத்தகம் ஆகிவற்றினூடாக நேரலையில் ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், இணைக்கப்பட்டுள்ள கியூ.ஆர் கோர்டை ஸ்கான் செய்வதனூடாக நேரலையில் இணைந்து கொள்ள முடியும் எனவும் துணைவேந்தர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (ம-7,10,33)

## கிளிநொச்சியில்...

வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி வளாகம் அமைந்துள்ள பகு திக்கு அருகில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை ரிப்பர் வாகனம் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,100,316)

## உரிய தீர்வு...

இது தொடர்பில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் சார்பில் தலைமை ஒருங்கிணைப்பாளர் அகத்தியர் அடிகளார், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கோரிக்கை கடிதங்களை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில், மகா சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் நடைபெற்ற அரச கட்டமைப்பின் அத்துமீறல்கள் மற்றும் பொலிஸாரின் அட்டூழியங்கள் என்பவற்றின் தொடர் விளைவாக ஆலய பூசகர், தர்மகர்த்தாக்கள் உட்பட எண்மர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்த நிலையில் இலங்கையில் வடகிழக்கில் தொடர்ச்சியாக சைவ ஆலயங்கள் குறிப்பாக புராதன ஆதி சிவன் ஆலயங்களில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு தமிழர்கள் மீது போலி வழக்குகள் பதிவு செய்வதும் அதேநேரம் அவை அரச இயந்திரத்தின் உதவியுடன் குறிப்பாக பொலிஸார், தொல்லியல், வனவளத் திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு உள்ளூர் தமிழ் மக்கள் சொல்லொணாத்துயரை அனுபவிப்பதும் தொடர்கதையாக உள்ளது.

எத்தனையோ கண்டன அறிக்கைகள் வெளியிட்டும், கவனயீர்ப்புக்கள் நடைபெற்றபோதும் அவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று எவ்விதப்பலனும் இல்லாமல் ஆகிவிட்டது.

இந்நிலையில் அரசிற்கு பாரிய அழுத்தத்தை பிரயோகிக்கவும், சிங்களப் பொதுசனங்களினதும் சர்வதேச கவனத்தையும் ஈர்த்து இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கொண்டு வர வேண்டிய நிலையில் ஜனநாயக ஒத்துழையாமை போராட்ட வடிவங்களில் ஒன்றாகிய பாராளுமன்றை உரிய தீர்வு கிடைக்கும் வரை புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்து உதவுமாறு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மத அமைப்புக்கள்,

நிறுவனங்கள், சிவில் சமூகம் சார்பாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பினராகிய நாம் கோரி நிற்கின்றோம்.

அந்தவகையில் தாங்களும் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இத்தீர்மானத்தினை எடுத்து இப்போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு கோரி நிற்கின்றோம் என்றுள்ளது. (ம-7,10,33)

## பொருளாதாரம்...

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் விரைவாக ஏற்றுமதி பொருளாதாரத்திற்குத் திரும்ப வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

முன்வைக்கப் பட்ட அனைத் துக் கேள்விகளுக்கும் சாதகமான பதில்களை வழங்கிய ஜனாதிபதி, இளைஞர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

**கேள்வி:**

தற்போது கைபேசிகளின் விலைகள்கடுமையாக உயர்ந்துள்ளன. மேலும், இணையத்தளச் சேவைக் கட்டணத்திலும் சிக்கல் உள்ளது. ஆனால் நீங்கள் ஒன்லைன் கல்வி முறையை அறிமுகப்படுத்தியதால், கடந்த கொரோனா காலத்தில் வச்தியாக அமைந்தது. எனவே இளைஞர்களின் தகவல் தொடர்பு அறிவை மேம்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளீர்கள்?

**பதில்:**

அனைத்தையும் இலவசமாகக் கொடுப்பது தான் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய முக்கிய காரணமாக இருக்கிறது. இலவசமாக கொடுப்பதற்காக வேறொருவரிடமிருந்து அறவிட வேண்டியுள்ளது. நம் நாட்டில் எல்லாவற்றையும்இலவசமாகக் கொடுத்தோம். வருமானம் இல்லாதபோது மக்களுக்கு இலவச நிவாரணம் வழங்க பணம் அச்சிடப்பட்டது. இதனால், நாம் பெற்ற வெளி நாட்டுக் கடனைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இறுதியாக,கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தோம் என்றார். (ம-7,10)


## லொத்தர் ரிக்கட் விற்பனையாளர் தேவை

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி இணுவில் பிரதேசத்தில் ரிக்கெட் விற்பனை செய்ய விற்பனையாளர் தேவை.

தொடர்புகளுக்கு:- (064)

077 122 8841, 076 185 2241


## பண்ணை...

வண்டியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பண்ணைகடலினுள்பாய்ந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. விசாரணைக்காக சென்ற முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இவ்வாறு கடலினுள் பாய்ந்த முச்சக்கரவண்டியானது உழவு இயந்திரத்தின் உதவியுடன் மீட்கப்பட்டது. (ம-7,10,33)


தன நிதானய — திகதி 2024.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 1448 — B 16 52 60 61 B — 21696

மஹஜன சம்பத — திகதி 2024/03/13 — சீட்டிழுப்பு இலக்கம் 5418 — C 5 7 0 8 6 4

மெகா பவர் — திகதி 13/03/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1766 — Q 02 04 23 35 64 — 68994

லக்கி 7 VIP — திகதி 2024.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0244 — G 7 0 4 8 0 0 G

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3660 — சீட்டிழுப்பு திகதி 13.03.2024 — P 24 61 71 80 — P 00716

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.03.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0727 — மிதுனம் 03 04 07 50 மிதுனம் — 22132 — 01

உத்தியோகபூர்வ முடிவுகள் — 13.03.2024 — வெற்றி வாரம் 126 — வர்ணம் பச்சை — Z 3 0 2 0 6 3 — F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,056,660.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2392 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 13.03.2024 — தினம் புதன்கிழமை — 06 07 34 45 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,969,352.80

சனிதா — திகதி 2024.03.13 — வெற்றி வாரம் 4553 — 10 30 34 49 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,849,596.80

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4104 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.03.13 — தினம் புதன்கிழமை — 17 36 41 50 — துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 11,286,544.40

கப்ருக — 1568 — 13.03.2024 — புதன்கிழமை — G 14 02 12 25 29 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 511,609,350.20

ஜயோதா Jayoda — திகதி 2024.03.13 — வெற்றி வாரம் 2008 — வர்ணம் மஞ்சள் — 06 14 33 44 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,474,144.80

அத கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2218 — வர்ணம்: ரோஸ் — சீட்டிழுப்பு திகதி: 2024.03.13 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 98,574,828/- — 06 07 18 31 J


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

கச்சாய் தெற்கு, கச்சாயில் உள்ள ஒரு கோவிலின்
வெளி மண்டபம் புதிதாக கட்டப்படவுள்ளதால்
அந்த மண்டபத்தில் போடப்பட்ட பனை மரம், வளை,
ஓடுகள் என்பன விற்பனைக்கு உண்டு.
மண்டபத்தை நேரில் பார்த்து விலையை தீர்மானிக்கலாம்

077 928 8808
077 493 7585

ஆலய பரிபாலன சபை

(C-8528)

## மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
### பகிரங்க ஏல விற்பனை

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி
நிதிக் கூட்டுத் தாபன வங்கி,
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
தபால்பெட்டி இல: 2085
கொழும்பு - 02

**வழக்கு இலக்கம் : MB/72/2018**

இதன் கிளை அலுவலகம்
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்
கூட்டுத்தாபன வங்கி,
இல. 127,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

எதிர் வழக்காளி

1. கதிரவேலு ஜீவரஞ்சன்
2. ஜீவரஞ்சன் உதயகீதா
இருவரும்
மீசாலை மேற்கு, மீசாலை,
யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

2023.04.21ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றினால் கட்டளையிடப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றினால் பதிவுசெய்யப்பட்ட விற்பனவு ஆணையாளராகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனவு அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனவை நடாத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த யாழ்ப்பாணம், மீசாலை மீசாலை மேற்கில் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2024ம் ஆண்டு சித்திரை மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

**தீர்வைத் தொகை**

1ம், 2ம் எதிராளிகள் வழக்காளிக்கு தனித்தும் ஒருமித்தும் (ரூ.1,431,645.39) பதின் நான்கு லட்சத்து முப்பத்தோராயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து ரூபாய் முப்பத்தொன்பது சதத்தினை 2019.11.28ம் திகதியிலிருந்து ஒவ்வொரு மாதமும் இறுதி வேலைநாட்களுக்கு முன்னர் வருடாந்தம் 17.5% வட்டியுடன் மாதம் ஒன்றிற்கு ரூபா 20,529.66 வீதம் கொடுக்க வேண்டியுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சிப்பகுதி, சாவகச்சேரி கோவிற்பற்று, மீசாலை இறை, J/319 கிராமசேவகர் பிரிவு, தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவு, சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட "தெட்சணாபுலம்" நிலப்பரப்பு 3 குளி 3.39 (பர.நில.இலா 3 குளி 3.39). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V. சிவராசா அவர்களால் 22.03.2014ம் திகதியில் 4260ம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு மாசில்லாமணி பூபதிக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கையும், துரைச்சாமி குருக்கள் கல்யாண சுந்தர குருக்களின் ஆதனம் தெற்கு சின்னப்பு தாமோதரம்பிள்ளை பெண் யோகேஸ்வரிக்குரிய ஆதனம், மேற்கு ஆறுமுகம் கைம்பெண் சரஸ்வதியின் ஆதனம், இடதங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்,

**இது யாழ்ப்பாணக் காணிப்பதிவகத்தில் F927/107இல் பதியப்பட்டுள்ளது.**

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரசிறை (புவுண்டேஜ்) - 1%
விளம்பர செலவுகளும் பிரசித்த செலவுகளும்
ஆதன மதிப்பீட்டு செலவு
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனை கமிசன் 2 1/2 %
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின் படி)
2024ம் ஆண்டு பங்குனி மாதம் 14ம் திகதி நீதிமன்றக் கட்டளைப்படி

**து. சிறீமோகன்**
**பதிவு செய்யப்பட்ட ஏலவிற்பனையாளர்.**
**இல. 197. கண்டி வீதி, யாழ்ப்பாணம்,**
T.P. No. 077 921 0099

(0050)

## Golden Green Farm
நாற்றுக்கள் விற்பனைக்கு
- கத்தரி
- மிளகாய்
- கறிமிளகாய்

FB-Gold and Green Farm
077 912 0404
077 532 8013
(0060)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (0069) 076 825 7716 (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

- இணுவில், இந்து, கௌரவகுலம், 1990, அனுசம், Quantity Surveyor, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சங்கானை, இந்து, கௌரவ குலம், 1992, விசாகம், B.A (Hons), Accountant, UK, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய், இந்து, கௌரவ குலம், 1984, சதயம், MBBS Doctor, IRELAND Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- பளை, இந்து, கௌரவ குலம், 1984, அவிட்டம், Phd, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வண்ணார் பண்ணை, இந்து, கௌரவ குலம், 1976, ரேவதி, MBBS DOCTOR, Divorce, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- நீர்வேலி, இந்து, கௌரவ குலம், 1989, சுவாதி, Phd in Chemistry, South Korea மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- திருநெல்வேலி, இந்து, கௌரவ குலம், 1987, ஆயிலியம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ்., இந்து, கௌரவ குலம், 1986, மகம், M.Sc, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய், இந்து, கௌரவ குலம், 1988, பூரட்டாதி, MBA கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சுதுமலை, இந்து, கௌரவ குலம், 1975, மிருகசீரிடம், BA Graduate, Australia மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(0053)

S.Sharma J.P
*Astrologer*
Tel : 077 539 3728
Whatsapp : 077 803 8193

## சிறையில் உள்ள...

வைக்கப்பட்டவர்களை சிறைச்சாலைக்கு சென்று உறவினர்கள் பார்வையிட்ட போதே குறித்த எட்டு பேரில் 5பேர் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

திலகநாதன் கிந்துஜன், சுப்பிரமணியம் தவபாலசிங்கம், மதிமுகராசா, துரைராசா தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகியோரே நேற்று முன்தினம் முதல் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் வவுனியா சிறைச்சாலையில் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய விவகாரம் தொடர்பில் சிறைக்காவலில் உள்ளவர்கள் சுகயீனம் காரணமாக காலை உணவினை உட்கொள்ளவில்லை என்பதுடன் தற்போது அவர்கள் உணவு உட்கொள்வதாகவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பீ.திஸாநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,10,250)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.
சம்பளம்: 40'000/-
வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:
0777068777
(C-8527)

## V2 VISA SERVICES
### கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8577)

## காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
- விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 071 173 3911, 076 853 5022**

(0070)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org